# இறையியல் கோலங்கள்

வடிவம் 36 ஜனவரி - ஜூன் 2017 வண்ணம் 01

ST. FRANCIS XAVIER'S SEMINARY LIBRARY COLUMBUTHURAI



அருளடையாளங்கள் - ஓர் இறையியல் பார்வை

திருவருட்சாதனங்களின் விவிலியப் பின்னணி

கிறிஸ்தவ வாழ்வில் புகுமுக அருட்சாதனங்கள்

திருவருட்சாதன வாழ்வும் இன்றைய சவால்களும்

இன்றைய எமது குடும்ப, சமூக வாழ்வில் ஒப்புரவின் அவசியம்

தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


Vol : 36
No. : 01
January - June : 2017

வடிவம் : 36
வண்ணம் : 01
ஜனவரி – ஜூன் : 2017


புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : அருட்தந்தை த.ஜெ.கிருபாகரன்

துணை ஆசிரியர்கள் : அருட்தந்தை இ.பெற்றூஸ் தயாபரன்
அருட்தந்தை ஆ.ஜஸ்ரின்

நிர்வாகக் குழு : அருட்சகோ. சூ.அஜித் சுலக்ஷன்
அருட்சகோ. அ.லியாண்ஸ்
அருட்சகோ. சூ.எட்வின் நரேஷ்
அருட்சகோ. ஜே.நிலான் யூலியஸ்
அருட்சகோ. செ.டிஷாந்தன்

**Editor** : **Rev. Fr. T.J.Kirupaharan**

**Sub Editors** : **Rev. Fr. I. Petrus Thayaparan**
**Rev. Fr. A.Justin**

**Administrative Board** : **Rev. Bro. S. Ajith Sulaxshan**
**Rev. Bro. A.Liyans**
**Rev. Bro. S.Edwin Naresh**
**Rev. Bro. J.Nilan Julius**
**Rev. Bro. S.Dishanthan**



**Publication** : **St. Francis Xavier's Seminary**
**Columbuthurai, Jaffna, Sri Lanka.**
**Tel. No. : 021 222 2482, 021 222 7145**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- **ஆசிரியர் உரை**
  அருட்கலாநிதி த.ஜெ.கிருபாகரன்

- **அருளடையாளங்கள் – ஓர் இறையியல் பார்வை**
  அருட்தந்தை தே.செல்வரட்ணம் 01

- **திருவருட்சாதனங்களின் விவிலியப் பின்னணி**
  அருட்தந்தை மி.ஜெகன்குமார் கூஞ்ஞ OMI 18

- **கிறிஸ்தவ வாழ்வில் புகுமுக அருட்சாதனங்கள்** 28
  அருட்சகோதரன் பி.றீ.நிதர்சன்

- **திருவருட்சாதன வாழ்வும் இன்றைய சவால்களும்** 36
  அருட்தந்தை ச.விமலசேகரன்

- **இன்றைய எமது குடும்ப, சமூக வாழ்வில் ஒப்புரவின் அவசியம்**
  திரு.இ.மரியதாஸ் ஜெயசீலன் 43

- **புனித பியோ**
  அருட்சகோதரன் சூ.எட்வின் நரேஷ் 49

- Synopsis


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

"மீட்புச் செய்தியை முதன் முதல் அறிவித்தவர் ஆண்டவரே. கடவுளும் அடையாளங்கள், அருஞ்செயல்கள், பல்வேறு வல்ல செயல்கள் மூலமாகவும், தம் திருவுளப்படி தூய ஆவியின் கொடைகளைப் பகிர்ந் தளித்ததன் மூலமாகவும் இதற்குச் சான்று பகர்ந்துள்ளார்" (எபி 2: 3-4).

"இறையியல் கோலங்கள்" திருவருட்சாதனங்களை (தேவ திரவிய அனுமானங்களை) கருப்பொருளாக உள்வாங்கி வெளிவருவதையிட்டு உவகை அடைகின்றேன். இறைமக்கள் திருவருட்சாதனங்களின் இயல்பை எளிதில் புரிந்து கொண்டு, உகந்த வேளைகளிலும் உரிய முறைகளிலும் பெற்றுக்கொண்டு, கிறிஸ்தவ வாழ்வை வளர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இவ்விதழின் ஆக்கங்கள் அமைந்துள்ளன.

இயேசுக்கிறிஸ்துவின் வழியாக கடவுளின் அன்பு வெளிப் படுத்தப்பட்டது. இறைமக்களுக்கு இறைவாழ்வில் பங்களிக்க இயேசுக் கிறிஸ்து திருவருட்சாதனங்களை அருளினார். திருவருட்சாதனங்கள் நமது வாழ்வின் அருள் நிலைகள்; அவையே அருள்பாலிக்கும் வழிகள். கடவுளின் அன்பும், அருளும், இரக்கமும் திருவருட்சாதனங்கள் ஊடாக உங்களது வாழ்வை வளமாக்கி உங்களையே திருவருட்சாதனங்களாக புதுப் பிறப்படையச்செய்ய வேண்டுமென்று ஆசிக்கிறேன்.

நட்புடன்
அருட்கலாநிதி த.ஜெ.கிருபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளடையாளங்கள் – ஓர் இறையியல் பார்வை

அருட்தந்தை தே.செல்வரட்ணம்
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

## முன்னுரை

ஒரு சமயத்தின் அல்லது சமூகத்தின் நம்பிக்கைக்கும், வாழ்விற்கும் அடிப்படை அம்சங்களாக இருப்பவை அவற்றின் சடங்குகள் ஆகும். எனவே தான் ஒரு சமயம் அல்லது ஒரு சமூகம் கொண்டுள்ள கொள்கைகளும், நம்பிக்கைகளும் குறிக்கோள்களும் அவை கொண்டுள்ள சடங்குகள் வழியாக விளக்கம் பெறுகின்றன. இப்பின்னணியில் கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படைச் சடங்குகள் "அருளடையாளங்கள்" என அழைக்கப் படுகின்றன. ஆனால் இவைகள் வெறும் அடையாளங்கள் அல்ல மாறாக ஆற்றல் மிக்க அடையாளங்கள் ஏனெனில் அவைகள் அருளைக் குறித்து அருளை வழங்குகின்றன.

அனைத்து "அருளடையாளங்களையும்", வெளிப்படையாகவோ அல்லது தனது பணி, போதனைகள் ஊடாகவோ, கிறிஸ்துவே ஏற்படுத்தினார் என்பது திருச்சபையின் போதனை.

கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மறையுண்மைகளில் பங்கெடுக்க துணைபுரியும் கருவிகளாக இருக்கின்றன. ஏனெனில் கிறிஸ்தவ வாழ்வின் மறையுண்மைகள், கிறிஸ்துவினுடைய வாழ்வின் மறையுண்மைகளாகும் (மகிழ்ச்சியின் மறையுண்மையாகிய பிறப்பு, ஒளியின் மறையுண்மையாகிய இறையாட்சி, துயர, மகிமை மறையுண்மைகளாகிய கிறிஸ்துவின் பாஸ்காவாகிய பாடுகள், மரணம், உயிர்ப்பு).

## 1. அருளடையாள சொல் விளக்கம்

கிறிஸ்துவிலிருந்து புறப்படும் அருளடையாளங்கள் உயிருள்ளவை, வாழ்வளிப்பவை. இயேசுவைத் தலையாகக் கொண்ட உடலாகிய திருச்சபையில் தூய ஆவியானவர் அருளடையாளங்கள் வழியாக செயலாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ சமய வரலாற்றில், ஆரம்பத்தில் *சக்கரமெந்தும் (sacramentum)* என்ற சொல்லே பல்வேறு மொழிகளிலும் நிலையாக, அருளடையாளங்களைக் குறித்து காட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. 16ம் நூற்றாண்டுவரை தமிழ் மொழியிலும் இச்சொல்லே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

*சக்கரமெந்தும்* என்னும் சொல் *sacrare* என்னும் வினைச் சொல்லையும் *mentum* என்னும் வினைப்பின்னடையும் கொண்டு ஒரு பொருளை, மனிதனைத் தூய்மைப்படுத்துவதற்குரிய (வழியாக) கருவியை குறித்து நிற்கின்றது.

அதே வேளையில், ஒன்றை புனிதப்படுத்துகின்ற செயலையும் (very action of consecrating something), புனிதப்படுத்தும் செயலைச் செய்பவரையும் (the agent himself), அல்லது புனிதமாக்கப்பட்ட பொருளையும் குறித்துநின்றது (very object made sacred). வேதாகமத்தின் இலத்தீன் மொழியிலான மொழி பெயர்ப்பில் (*vulgate*) *மிஸ்தெரியோன்* (*mysterion*) என்ற கிரேக்கச் சொல்லின் மொழி பெயர்ப்பிற்கு *sacramentum* என்ற இலத்தின் சொல்லைப் பயன்படுத்தினர்.

வேதாகமத்தில் *மிஸ்தெரியோன்* (*mysterion*) என்ற சொல், "மறைவாயிருக்கின்ற பொருள்" (a hidden thing), இரகசியம் (secret), or மறைபொருள் (a mystery), குறிப்பாக, கடவுளிற்கு மட்டும் வெளிச்ச மாயிருப்பது, "மனிதனால் அறிந்து கொள்ள முடியாதது", என்பவற்றைக் குறித்து நிற்கின்றது. இன்னும் குறிப்பாக, காலம் நிறைவுற்றபோது மனிதனை மீட்பதற்குரிய இறைவனின் மீட்புத்திட்டத்தைக் குறித்து நின்றது. இச் சொல் தமிழில் "மறையுண்மை" என அழைக்கப்படுகின்றது.

எனவே "மறையுண்மை" (mystery), "அருளடையாளங்கள்" (sacrament), இரண்டும் ஒத்த கருத்தையுடைய சொற்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

புதிய ஏற்பாட்டில், ஒத்தமை நற்செய்தியாளர்கள், இறையரசின் மறையுண்மைகளைக் குறிக்க *மிஸ்தெரியோன்* என்ற சொல்லைப் பயன்படுத்தினர். புனித பவுலின் திருமுகங்களில் இச்சொல் பல கருத்துப்பட பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, கிறிஸ்துவையும், கிறிஸ்து நிகழ்வுகளையும், திருச்சபையையும், ஏன் திருமணத்தையும் குறிப்பதற்கு இச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நூற்றாண்டில் தேர்த்தூலியன் முதன்முதலாக *சக்கரமெந்தும் (sacramentum)* என்னும் இலத்தின் சொல்லை திருச் சபையால் கொண்டாடப்படும் வழிபாட்டுச் சடங்கை குறித்துக் காட்டப் பயன்படுத்துகின்றார். குறிப்பாக, கிறிஸ்தவ புகுமுக சடங்கை அல்லது திருமுழுக்கைக் குறிக்க இச்சொல்லைப் பயன்டுத்துகின்றார்.

தொடர்ந்து வந்த திருச்சபைத் தந்தையர்கள் ஏனைய அருளடையா ளங்களைக் குறித்துக்காட்டவும் இச்சொல்லைப் பயன்படுத்தினர்.

16ம் நூற்றாண்டு வரை தமிழ் மொழியிலும் இச்சொல்லே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதற்கான குறிப்பு தம்பிரான் வணக்கம் (1578) என்ற நூலில் காணப்படுகின்றது. பின்னர் இராபாட் தே நொபிலி என்ற இயேசுசபைக் குரு "தேவ திரவிய அனுமானங்கள்" என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் (மதுரை மந்திரம் 1606).

1960களில் 'தேவ திரவிய அனுமானம்' என்னும் சொல் 'திருவருட்சாதனம்' என்னும் புதிய சொல்லால் இடப்பெயர்ச்சி செய்யப் பட்டது.

1980களில் 'அருளடையாளம்' என்னும் சொல் சிறப்பாக அமையும் என இறையியலாளர் கருதினர். 'சாதனம்' என்ற வடமொழிச் சொல்லைத் தவிர்க்கவும், 'கருவி' என்னும் அழுத்தத்தைக் குறைக்கவும் இச்சொல் ஏற்றதாக அமையும் என நம்பினர்.

'அடையாளம்' என்ற சொல் ஓர் அடையாளத்தை மட்டுமன்றி, அது குறித்துக் காட்டும் மெய்மையையும் சுட்டிக் காட்டுகிறது. இப்பொருளில் 'அருளடையாளம்' என்பது இறையருளைக் குறித்துக் காட்டும் அடையாளம் என்பதுடன், அதனை வழங்கும் ஆற்றல் படைத்த மெய்மையாகவும் அமைகின்றது.

## அருளடையாளங்கள் என்றால் என்ன?

அருளடையாளங்கள் எனப்படுபவை கண்ணால் காணப்படும் அடையாளங்கள் (visible signs) ஊடாக கண்ணால் காணமுடியாத (invisible grace) அருளை குறித்து நிற்பவை.

இதனை திருமறைச் சுவடி இன்னும் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது: "அருள் வாழ்வைக் குறித்துக் காட்டவும், அதனை வழங்கவும் கிறிஸ்து ஏற்படுத்திய நிலையான அடையாளமே திருவருட்சாதனம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் வத்திக்கான் சங்கம் அருளடையாளங்களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறது: "அருளடையாளக் கொண்டாட்டங்களுக்கு நம்பிக்கை முன்னதாகத் தேவை என்பது மட்டுமன்று, மாறாக, அவை சொற்களாலும், சடங்குக் கூறுகளாலும் நம்பிக்கையைப் பேணிவளர்க்கின்றன; உறுதிப்படுத்துகின்றன; எனவே இவை நம்பிக்கையின் அருளடையாளங்கள்" என கூறுகின்றது (திருவழிபாடு, எண் 59).

அருளடையாளக் கொண்டாட்டங்கள் உண்மையான விசுவாசத்துடன் கொண்டாடப்படவில்லையென்றால், அவை வெறும் அர்த்தமற்ற சடங்குகள் ஆகிவிடும்.

மேலும், இரண்டாம் வத்திக்கான் சங்கம் அருளடையாளங்களின் "செயல் முதல்வர்" இயேசுக் கிறிஸ்துவே என எடுத்துரைக்கின்றது. "அருளடையாளங்களில் (கிறிஸ்து) தமது வல்லமையால் எவ்வாறு உடனிருக்கிறார் என்றால், திருமுழுக்கு அளிக்கும் போது கிறிஸ்துவே அதை அளிப்பவராகிறார்" (திருவழிபாடு எண் 7).

ஏனெனில் ஒவ்வொரு அருளடையாளத்தின் மையமாக இருப்பது கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருள் (paschal mystery). ஒவ்வொரு அருளடையாளமும் இதனையே மீண்டும் உடனிருக்கச் செய்கிறது; கொண்டாடுகிறது; செயல்படுத்துகிறது; நிகழ்காலப் படுத்துகிறது. இக் காரணத்திற்காக, அருளடையாளங்கள் அனைத்தும் பாஸ்கா மறை பொருளில் இருந்தே தமது அருள் தரும் ஆற்றலைப் பெறுகின்றன.

## 2. இயேசுக் கிறிஸ்துவே முதன்மையான அருளடையாளம் (Jesus Christ as the Primordial Sacrament)

அருளடையாளங்கள் எனப்படுபவை கண்ணால் காணப்படும் அடையாளங்கள் ஊடாக கண்ணால் காணமுடியாத அருளைக் குறித்து நிற்பவை என பார்த்தோம்.

மீட்பின் வரலாற்றில், மீட்பு என்னும் கொடையை கடவுள் கிறிஸ்து வழியாக, கிறிஸ்துவில் நிறைவேற்றினார். எனவே இயேசுக் கிறிஸ்து தந்தையாம் இறைவனின் முழுமுதல் அடையாளம். இதனை இலகுவாக புரிந்து கொள்வதற்கு, கிறிஸ்து இம்மீட்புச் செயலை எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.1. மீட்பின் வரலாற்றில் கிறிஸ்துவின் பணி

கடவுள் மனிதனை தமது சாயலிலும், பாவனையிலும் படைத்து தம்முடைய இறை இயல்பில் அவனுக்கு பங்கு கொடுக்கின்றார். “மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்” (தொ.நூல் 1:26). இவ்வாறு கடவுள் மனிதருக்குத் தன்னை வெளிப்படுத்தி, மனிதனோடு உறவை ஏற்படுத்துகின்றார்.

மனிதனோ பாவம் செய்து, அருள் நிலையை இழக்கின்றான். இருப்பினும், இறைவன் மனிதனைக் கைவிடவில்லை, அவன் மீது இரக்கம் கொண்டு அவனை மீட்க திருவுளம் கொள்கின்றார். இதற்கு தம் மகன் ஊடாக மீட்புக் கொடுக்க கூடிய ஓர் உறுதியான மீட்புத் திட்டத்தை தெரிவு செய்கின்றார். தன்னுடைய ஒரே மகனை மனித உருவில் இவ்வுலகிற்கு அனுப்புகின்றார். “வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடி கொண்டார்” (யோவா 1:14). அதாவது, இறைவன் மனிதன் ஆகின்றார்; அவர் மனிதன் ஆகவும், இறைவனாகவும் இருக்கின்றார்.

எனவே, கிறிஸ்துவின் “மனுவுடலேற்கை” என்ற மறை பொருள், மனிதனின் அர்ச்சிப்பின், புனிதப்படுத்துதலின், அருளின் மறை பொருள் (the mystery of grace). ஏனெனில், கிறிஸ்துவில், இறைவனாகிய மீட்பர் எமக்கு அருளாக வந்தார், அவரே அருளாகவும் நம்மிடையே இருக்கின்றார் (grace with us). இம்மானுவேல் (Emmanuel).

கிறிஸ்துவே அருள் என்பதனை இரண்டு வழிகளில் பார்க்க முடியும். முதலாவது, Descending dynamism, அதாவது, கிறிஸ்து தந்தையாகிய இறைவனை நாம் அறிய வழியமைத்தார். தமது சொற்களாலும், செயல்களாலும் மட்டுமல்ல, மாறாக, தம்முடைய ஆள் தன்மையில் (with his very person) கடவுளை எமக்கு வெளிப்படுத்தினார். எனவே தான் “என்னைக் காண்பது தந்தையைக் காண்பதாகும்” (யோவா. 14: 9) எனக் கூறுகின்றார்.

எனவே, கடவுள் கிறிஸ்துவில் மனிதனை சந்தித்தார். அவனை தம்முடைய தெய்வீக இயல்பில் பங்கெடுக்கவும் செய்தார். இவ்வாறு கிறிஸ்து இறைவனுக்கும், மனிதருக்கும் இடையே ஓர் ஒப்பற்ற, நிகரற்ற இணைப்பாளராகத் திகழ்கின்றார். இதனை பவுலும் உறுதிபட, கடவுளையும், மனிதரையும் இணைப்பவர் ஒருவரே.... இவர் கட்புலனாகா கடவுளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயல் என்றும், இறை இரக்கத்தின் அருள் உருவம் என்றும் இறை மீட்பின் திருவெளிப்பாடு என்றும் எடுத்துக் கூறுகின்றார் (கொலோ 1: 15).

இரண்டாவது, Ascending dynamism அதாவது கடவுள் கிறிஸ்து வழியாக தம்மை வெளிப்படுத்தி மனிதகுலத்திற்கு மீட்பை கொடுத்தது மட்டுமல்ல, மாறாக, கிறிஸ்து இறைவனுக்கு மாட்சிமையும் கொடுத்தார் (Ascending dynamism).

ஏனெனில் கிறிஸ்துவின் செயல்கள் மனிதனைப் புனிதப்படுத்தும் கடவுளின் செயல்கள் மட்டுமல்ல, மாறாக, தந்தையாம் இறைவனுக்கு மனிதன் கொடுக்கும் ஒப்பற்ற ஆராதனையாகவும் உள்ளது.

எனவே, கிறிஸ்து இறைவன் என்னும் நிலையில் (insofar as he is God) (descending dynamism) மனிதரின் மீட்பர் மட்டுமல்ல, கிறிஸ்து மனிதர் என்னும் நிலையில் (insofar as he is man) (ascending dynamism) தந்தையாம் இறைவனுக்கு முழுமையான ஆராதனை செலுத்துபவராகவும் உள்ளார் (the perfect worshipper of the Father). கிறிஸ்துவின் வாழ்வில், பணியில் இவ்விரண்டு பரிமாணங்களையும் (dimensions) ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இவ் இரண்டும் முழுமையான ஒத்த தன்மையுடையவை. ஏனெனில் இவை வார்த்தை மனுவுருவான கிறிஸ்துவின் ஒரே மீட்பு செயலின் இரண்டு பரிமாணங்கள் (descending and ascending, sanctifying and worshiping).

எனவே, கிறிஸ்து வழியாக இறைவன் மனிதரையும், மனிதர் இறைவனையும் எளிதாக அடைய முடிகிறது. கிறிஸ்துவே இறை மனித சந்திப்பின், இணைப்பின், ஒன்றிப்பின் காணக்கூடிய அடையாளமாகத் திகழ்கின்றார். இவ்வாறு அவரே முதன்மையான அருளடையாளமாகத் (Primordial Sacrament) திகழ்கின்றார். ஏனெனில் அருளடையாளங்களின் அடிப்படையும், அருள்தரும் ஆற்றலுமாகிய பாஸ்கா மறைபொருளை அவரே நிறைவேற்றினார்.

## 3. திருச்சபை: அடிப்படை அருளடையாளம்
(Church as Fundamental Sacrament)

கிறிஸ்து கடவுளின் அருளடையாளமாக இருப்பதுபோல், திருச்சபையும் கிறிஸ்துவின் அருளடையாளமாகத் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு கிறிஸ்து இவ்வுலகில் மனிதராக வாழ்ந்த போது, தந்தையைப் பிரதிபலித்து — அவரில், அவர் வழியாக - கடவுளின் மீட்பை மனிதர் கண்டு கொள்ள முடிந்ததோ, அதே போன்று, திருச்சபையும் கிறிஸ்துவைப் பிரதிபலித்து, அதனில் - அதன் வழியாகப் கிறிஸ்துவின் மீட்பை மனிதர் கண்டு கொள்ள முடிகிறது.

அதாவது, இறைவனின் அடையாளம் என்ற இயேசுவின் இயல்பை திருச்சபை, வரலாற்றில் தொடர்ந்து பிரதிபலிக்கின்றது. இதற்காகவே தமக்குப் பிறகு உலக முடிவுரை, தமது பணியைத் தொடர்ந்தாற்ற திருச்சபையை ஏற்படுத்தினார்.

இன்று நாம் கிறிஸ்துவின் உடலை கண்ணால் காணாவிட்டாலும், அவரது மறையுடலாகிய திருச்சபையைக் காண்கின்றோம். திருச்சபையே, அவரது உடல். எல்லா வகையிலும் எப்பொழுதும் இறைவனால் நிறைவாக்கப்பெறும் கிறிஸ்துவின் நிறைவே அத்திருச்சபை (காண். கொலோ 1:15-18) என புனித பவுல் எடுத்துக் கூறுகின்றார்.

எனவே, கட்புலனாகா கிறிஸ்துவின், காணப்படும் சாயலே திருச்சபை. திருச்சபை ஓர் அருளடையாளம் என்னும் கோட்பாடு புதியதொன்றல்ல. இக் கோட்பாடானது திருச்சபையின் வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக உறுதிப்படுத்தப்பட்டும், ஆழப்படுத்தப்பட்டும் வந்துள்ளது.

குறிப்பாக, திருத்தந்தை 12ம் பத்திநாதர், 1934ல் வெளியிட்ட *Mystici Corporis Christi* என்றும் சுற்றுமடலில், இக்கோட்பாட்டை உறுதிபட எடுத்து விளக்கியுள்ளார்.

திருச்சபை ஓர் அருளடையாளம் என்னும் கோட்பாடு தற்கால இறையியலாளர்கள் பலராலும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, ஹென்றி டி லுபாக், "கிறிஸ்து கடவுளின் அருளடையாளமாக இருப்பது போல், திருச்சபை எமக்கு கிறிஸ்துவின் அருளடையாளமாக இருக்கின்றது" என கூறுகின்றார்.

அதாவது, கிறிஸ்து தம்முடைய மனித இயல்பில் எம் எல்லோருக்கும் கடவுளின் அருளடையாளமாக இருப்பது போன்று, இவ்வுலகில் திருச்சபை கிறிஸ்துவின் அருளடையாளமாக விளங்குகின்றது.

இன்னும், காள் றானர் என்னும் இறையியலாளர் திருச்சபைக்கும், அருளடையாளங்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பை வலியுறுத்துகின்றார். இயேசுக் கிறிஸ்து இறை அருளின் வரலாற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னம் என்றால், அவரது வரலாற்று அடையாளம் திருச்சபையாக அமைகிறது. திருச்சபை அதன் இயல்பை அருளடையாளங்களின் வழியாகப் பெறுகிறது எனக் கூறுகின்றார்.

இவ்விறையியலாளர்களைத் தொடர்ந்து திருச்சபையின் அருளடையாளத் தன்மை, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தாலும் வரையறுக்கப்பட்டது.

குறிப்பாக, "திருவழிபாடு" என்னும் கொள்கைத் திரட்டு, "நம் சாவைத் தம் சாவினால் அழித்து, தம் உயிர்த்தெழுதலினால் நமக்கு மீண்டும் உயிர் அளித்துள்ளார். ஏனெனில் சிலுவையிலே துயில்கொண்ட கிறிஸ்துவின் விலாவிலிருந்து முழுத் திருச்சபை என்னும் அருளடையாளம் தோன்றியது" எனக் கூறுகின்றது (காண் எண். 5).

மேலும், "திருச்சபை" என்னும் கொள்கைத் திரட்டு "... கிறிஸ்துவில் இத்திருச்சபை ஓர் அருளடையாளம் போல் விளங்குகின்றது: அதாவது, இறைவனோடு உள்ள நெருங்கிய ஒன்றிப்பிற்கும் மனித குலம் முழுவதன் ஒற்றுமைக்குமான அடையாளமும் கருவியுமாய் உள்ளது" எனக் கூறுகின்றது (காண். எண். 1).

இன்னும் "... கிறிஸ்து உலகிலிருந்து உயர்த்தப்பெற்றபின் அனைவரையும் தம்பால் ஈர்த்துக் கொண்டார். இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட அவர், உயிரளிக்கும் தம் ஆவியாரைச் சீடர்களுக்கு அனுப்பினார்; இவர் வழியாகவே திருச்சபையாகிய தமது உடலைக் கிறிஸ்து அனைவருக்கும் நிறைவாழ்வின் அருளடையாளமாக நிறுவினார்" (காண். எண். 48).

## 3.1. திருச்சபை – கிறிஸ்துவின் மறையுடல்
(As the Mystical Body of Christ)

திருச்சபையில் இயேசு உடனிருக்கிறார் (மத் 18:20). உலகம் முடிவுவரை தமது உடனிருப்பை வாக்களித்தார் (மத் 28:20). இயேசுவின் வார்த்தைகளிற்கேற்ப திருச்சபையில் அவர் நிகழ்த்திய அருளடையாளங் களால் அவருடைய உடனிருப்பை நிருபித்துள்ளார் (மாற் 16:20). தூயபவுலும் திருச்சபையில் இயேசுவின் உடனிருப்பைக், கண்டு, திருச்சபையை கிறிஸ்துவின் உடல் (Body of Christ) என அழைக்கின்றார் (1கொரி 12: 12-13, 27-31).

"கிறிஸ்துவின் உடல்" என்னும் சொற்றாடர் கிறிஸ்துவின் ஆள் தன்மையை (the physical person of Christ) மட்டும் குறித்துக்காட்டவில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக, திருமுழுக்கின் ஊடான விசுவாசிகளின் குழுமத்தையும் குறித்து நிற்கின்றது.

"கிறிஸ்துவின் உடல்" என்னும் விவிலிய சொற்றொடருக்கு இடைக்காலத்தில் திருச்சபையின் பாரம்பரியம், "மறைபொருள்" (mystical) என்னும் பெயருரிச் சொல் (adjective) சேர்க்கப்பட்டது.

திருத்தந்தை 12ம் பத்திநாதர், *Mystici Corporis Christi* என்னும் தம்முடைய சுற்றுமடலில், "கிறிஸ்துவின் உண்மைத் திருச்சபையை (the Church of Christ) வரைவிலக்கணப்படுத்துவதற்கும் (to define), விளக்குவதற்கும் (describe), கிறிஸ்துவின் மறையுடல் (mystical body of Jesus Christ) என்னும் சொற்றொடரைவிட மேன்மையான, தெய்வீகத் தன்மை வாய்ந்த சொற்றொடர் இல்லை எனக் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்டுள்ள, 'திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்' என்னும் வரைவிலக்கணம், ஒவ்வொரு அருளடையாளத்திற்கும் உரிய இரண்டு முக்கிய மெய்மைகளாகிய (realities): கண்ணால் காணக்கூடிய (the visible one), கண்ணால் காணமுடியாத (the invisible one) மெய்மைகளையும் வெளிக்கொணர்கின்றது.

எனவே, திருச்சபை "உடல்" (body) என்றும் கூறும்போது, இச் சொற்றொடர் கண்ணால் காணக்கூடிய (something visible), புலன்களால் அறியக் கூடிய திருச்சபையின் மெய்மையை சுட்டிக்காட்டுகின்றது.

கிறிஸ்துவின் உடல் என்னும் சொற்றொடருக்கு "மறைபொருள்" (mystical) என்னும் பெயருரிச் சொல்லைச் சேர்ப்பது திருச்சபையின் மற்றொரு மெய்மையாகிய புலன்களுக்குப் புலப்படாத பரிமாணத்தை விளக்குகின்றது.

இவ்விரண்டு மெய்மைகளும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாததாகும். எதாவது ஒன்றை மட்டும் முதன்மைப்படுத்துவது தப்பான போதனைக்கு வழிவகுக்கும். கிறிஸ்துவில் எவ்வாறு அவருடைய தெய்வீக இயல்பையும், மனித இயல்பையும் பிரித்துப் பார்க்க முடியாதோ, அதே போன்று திருச்சபையின் இவ்விரு மெய்மைகளையும் பிரித்துப் பார்க்க முடியாது.

இக் கருத்தானது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினால் கருத்தில் கொள்ளப்பட்டு வலியுறுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரே இணைப்பாளரான கிறிஸ்து இந்த உலகிலே நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றைக் கொண்ட சமூகமான தமது தூயத் திருச்சபைக்குக் காணக்கூடிய ஓர் அமைப்பை அளித்து அதைத் தொடர்ந்து காத்து வருகிறார்; இதன் வழியாக உண்மையையும், அருளையும் எல்லாருக்கும் அவர் வழங்குகிறார். இது பல்வேறுபட்ட உறுப்புக்களைக் கொண்டு நிறுவப்பட்ட சமூகமாகவும், கிறிஸ்துவின் மறை உடலாகவும் விளங்குகிறது; கண்ணுக்கு புலப்படும் குழுவாகவும், அருள் சமூகமாகவும் இலங்குகிறது; மண்ணகத் திருச்சபையாகவும் விண்ணக நலன்களால் நிரப்பப்பட்ட திருச்சபையாகவும் திகழ்கிறது. எனினும் இவற்றை வேறுபட்ட இரு எதார்த்தங்களாகக் கருதக் கூடாது. மாறாக, இவை மானிட, மற்றும், தெய்வீகக் கூறுகளைக் கொண்ட ஒரே கட்டமைப்பையே உருவாக்குகின்றன. எனவேதான், மனிதரான வாக்கின் மறை நிகழ்ச்சிக்கு ஏற்ற உவமையாக இது ஒப்பிடப்பெறுகிறது. கடவுளின் வாக்கு தமதாக்கிய மனித இயல்பு எவ்வாறு நிறைவாழ்வின் உயிருள்ள ஒரு கருவியாக அவரோடு பிரிக்க முடியாதவாறு இணைந்து அவருக்கு பணிபுரிகின்றதோ, அவ்வாறே திருச்சபையின் சமூக அமைப்பும், அதற்கு உயிரூட்டுபவரான கிறிஸ்துவின் ஆவியாருக்கு அவ்வுடல் வளர்ச்சி பெற உதவுகிறது. (காண். எபே 4:16) (காண். திருச்சபை, எண். 8).

## 4. புதிய உடன்படிக்கையின் அருளடையாளங்கள் – திருச்சபையின் அருளடையாளங்கள்

(The Sacraments of the New Law - Sacraments of the Church)

கிறிஸ்து கடவுளின் அருளடையாளமாகவும், திருச்சபை கிறிஸ்துவின் அருளடையாளமாகவும் இருப்பது போன்று, ஏழு அருளடையாளங்களும் திருச்சபையினுடையவை. இவ்வருளடையாளங்கள் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டு, அவரே அவற்றை திருச்சபையிடம் ஒப்படைத்தார். இவ்வருளடையாளங்களை நிறைவேற்றும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உரியது. அத்தோடு இவ்வருளடையாளங்களை திருச்சபைக்குள்ளேயே நிறைவேற்ற முடியும். எனவே, அருளடையாளங் களை அருளினை வழங்கும் கருவிகளாகவும், திருச்சபையினை அவற்றை நிறைவேற்றும் நிர்வாகியாகவும் (administrator) கொள்வதனூடாக திருச்சபைக்கும் அருளடையாளங்களுக்கு மிடையிலான உறவை இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபைக்கும், அருளடையாளங்களுக்குமிடையிலான உறவு நிலையானது; ஒரு கரத்திற்கும், அதன் விரல்களுக்கும் இடையில் இருக்கக்கூடிய உறவின் மூலம் ஒப்பிடப்படுகின்றது. கடவுள் மனிதனோடு தொடர்பை ஏற்படுத்தி அவனுக்கு மீட்பின் அருளைக் கொடுக்கும் கரமாக திருச்சபையும், உடனடியாகவும், நேரடியாகவும் மனிதன் கடவுளால் அவனுடைய வாழ்வின் நிலைகளுக்கேற்பவும், தேவைகளுக்கேற்பவும் தொடப்படும் கரத்தின் விரல்களாக அருளடையாளங்களும் உள்ளன.

இவ்வருளடையாளங்கள் இவற்றை பெறுபவரை திருச்சபையோடு தொடர்பை ஏற்படுத்தி, திருச்சபையினுள் இணைத்து, மீட்பின் திட்டத்திற்குள் உள்ஈர்த்து, அருளை வழங்குவதன் ஊடாகவே, இவை திருச்சபையின் அருளடையாளங்களாக இருக்கமுடியும். ஆகவே, இது திருச்சபையினூடாகவே இடம்பெறுகிறது.

எனவே, ஒவ்வொரு அருளடையாளத்தினதும் முதன்மையானதும், உடனடியானதுமான பயன் (effect) திருச்சபையோடு உண்மையான உறவை ஏற்படுத்துவது, அல்லது, ஏற்கனவே இருக்கும் உறவை மீண்டும் திடப்படுத்துவதாகும்.

அருளடையாளங்களில் நிறைவேற்றப்படுகின்ற முதல் பயனான வெளியார்ந்த அருளடையாளச் செயல் கண்ணுக்கு புலப்படாத அருளடையாள அருளிற்கு அத்திவாரமாக அமைகிறது.

திருச்சபை மனிதர்களை தன்னுள் இணைப்பதன் ஊடாகவும், அருளடையாளங்கள் ஊடாக அருளை வழங்குவதன் மூலமும் மீட்படைந்தோர் சமூகமாக (salvific community) தன்னில் விளங்குகின்றது. உலகிற்கு அருளை வழங்கி மீட்பைக் கொணரும் பணி திருச்சபைக்குத் தரப்பட்டிருக்கிறது. எனவே, முதலில் திருச்சபை தானே இயேசு கிறிஸ்துவின் அருளடையாளமாக மாறி, தனது பிற ஏழு அருளடையாளங்கள் வழியாக தனது அருளடையாளப் பண்பால் உலகிற்கு அருள் அல்லது மீட்பை வழங்கும் பணியைத் தொடர்கிறது. இந்த வகையில் மீட்படைந்த சமூகம் எனும் திருச்சபையின் முழுமையான அடைவிற்கு அருளடையாளங்களே ஊன்று கோலாக அமைகின்றது எனலாம்.

இறுதியாக, அருளடையாளங்கள் திருச்சபையை உருவாக்குகின்ற (form the Church), நெறிப்படுத்துகின்ற (structure the Church) தன்மைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதால், அவை திருச்சபையின் அருளடையாளங்கள் எனக் கொள்ளப்படுகின்றன.

புனித அகுஸ்தீனார், அருளடையாளங்கள் சிலுவையில் இயேசுவின் விலாவிலிருந்தே தோன்றின எனவும் அவற்றிலிருந்துதான் திருச்சபை உருவானது எனவும் கூறுகின்றார்.

அகுஸ்தீனாருடைய சிந்தனைகள் மீளவும் பரிசீலிக்கப்பட்டு, புனித தோமஸ் அக்குவாயினஸ் அவர்களால் மீள் உறுதிசெய்யப்பட்டது. எனவே, திருச்சபை இல்லையேல் அருளடையாளங்கள் இல்லை என்னும் கருத்து உண்மையாக இருப்பதுபோல, அருளடையாளங்கள் இல்லாமல் திருச்சபையும் இருக்கமுடியாது. இதில் முதலாவது, அருளடையாளங்களின் திருச்சபை எனவும் (the Church of Sacraments) மற்றயது, திருச்சபையின் அருளடையாளங்கள் எனவும் (the Saraments of the Church) கொள்ளப் படுகின்றது.

எனவே, உண்மையில், திருச்சபையானது அருளடையாளங்களின் ஊடாகவே இயங்குகின்றது, பிறக்கின்றது, வளர்ச்சியடைகின்றது, காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப பரந்து விரிகின்றது, தன்னை புதுப்பித்துக்கொள்கின்றது, தன்னை முழுமையாக்குவதோடு தனது பணிகளையும் நிறைவேற்றிக் கொள்கின்றது. எனவே, அருளடையாளங்கள் இன்றி கிறிஸ்து நிறுவ விரும்பிய திருச்சபையை கருத்தளவில் கூட எண்ணிப்பார்க்க முடியாது.

## முடிவுரை

புதிய உடன்படிக்கையின் அருளடையாளங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் நிறுவப்பட்டு திருச்சபையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. ஆகவேதான், அருளடையாளங்கள் திருச்சபையின் இன்றியமையாத அடிப்படை அமைப்புக் கூறுகளாக உள்ளன.

ஆகவே திருச்சபையின் அங்கத்தவர் ஒவ்வொருவருடைய வாழ்விலும் அருளடையாளங்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. அவை இல்லையென்றால் கிறிஸ்தவ வாழ்வே இல்லை என்று கூடச் சொல்லிவிடலாம். அந்த அளவுக்கு ஒரு கிறிஸ்தவரின் வாழ்வில், பிறப்பிலிருந்து இறப்புவரை, அவை முக்கியமான இடம் வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, அருளடையாளங்கள் ஊடாக கிறிஸ்தவ வாழ்வை கிறிஸ்துவோடு இணைந்ததாகக் கட்டி எழுப்புவது திருச்சபையின் தலையாய பணியாகும். இதனையே இரண்டாம் வத்திக்கான் சங்கம், அருளடையாளக் கொண்டாட்டங்கள் சடங்குக் கூறுகளாலும், சொற்களாலும் ஒருவருடைய விசுவாசத்தை உறுதிப்படுத்துவதோடு அவ்விசுவாசத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தவும் உதவ வேண்டும் என கூறுகின்றது.

## உசாத்துணை நூல்கள்



HAFFNER P., *The Sacramental Mystery*, Gracewing, Herefordshire, 2008.

MARTINS J.S., *The Sacraments of the New Alliance*, TPI, Bangalore, 1988.

ஆரோக்கியராஜ் ஸ்., திருவழிபாடு ஓர் அறிமுகம், TNBCLC, திண்டிவனம், 2008.

மதுரை ஆனந்த்., அருளடையாள அறிமுகம், திரு இருதயக் குருத்துவக் கல்லூரி, சென்னை.

லியோன், பவுல் வ., பதிப்பாசிரியர், இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், தேடல் வெளியீடு, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 2001.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்சாதனங்களின் விவிலியப் பின்னணி

அருட்தந்தை மி. ஜெகன்குமார் கூஞ்ஞ OMI
B.Ph, B.Th (Rome), L.S.S (Rome),
Dip in Hebrew (Jerusalem)

கத்தோலிக்க திருச்சபையின் நம்பிக்கைப்படி ஏழு திருவருட் சாதனங்கள் பாரம்பரியமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மற்றைய கிறிஸ்தவர்களும் திருவருட்சாதனங்களிலே நம்பிக்கை கொண்டாலும், கத்தோலிக்க திருச்சபை தன்னுடைய திருவருட்சாதனங்களை தனித்துவ மானதாகவும், விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லாத நம்பிக்கையாகவும் கருதி மரியாதை செய்கின்றது. இந்த ஏழு திருவருட்சாதனங்களும் தன்னகத்தே ஒரு வெளி அடையாளத்தையும், ஓர் உள்ளார்ந்த அருளையும் கொண்டுள்ளன. இந்த இரட்டை அடையாளங்கள், தூய ஆவியானவரின் செயற்பாட்டை ஒவ்வொரு திருவருட்சாதனத்திலும் காட்டுகின்றன. ஏனெனில் தூய ஆவியார்தான் திருவருட்சாதனங்களின் இயக்குனராக இருக்கிறார். உதாரணமாக, திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனத்திலே, ஒருவர் நீரினாலே கழுவப்படுகிறார். நீரினாலே கழுவுதல் எபிரேய கலாச்சாரத்திலும் இன்னும் பல கலாச்சாரங்களிலும் தூய்மைப்படுத்தலைக் குறிக்கின்றது. சந்திப்புக் கூடாரத்தின் நுழைவாயிலில் ஆரோனையும் அவன் புதல்வரையும் அருகில் வரச்செய்து, அவர்களைத் தண்ணீரால் கழுவுதல் (வி.ப. 29:4). இந்த அடையாளக் கழுவுதல், அருட்சாதனமாக மாறி, திருமுழுக்கு பெறுகிறவர் தன்னுடைய சென்ம பாவத்திலிருந்து கழுவப்பட்டு, அவருடைய ஆன்மா தூய்மையானதாக மாற்றப்பெறுவதைக் குறிக்கிறது. ஆக, இது ஒரு வெளி கழுவுதல் ஆனால் அதன் அர்த்தம் உண்மையான ஆன்மாவை கழுவுதலைக் குறிக்கிறது. இதனை பலவேளைகளில் புதிய ஏற்பாடு உதாரணப்படுத்தியிருக்கிறது. இயேசு அவரைப் பார்த்து. "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" (யோவான் 3:5). அதற்குப் பேதுரு, அவர்களிடம், "நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள்" (தி.ப.2:38). இன்னும் சற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக விவிலியப் பார்வையில் வாசித்தால், திருமுழுக்கு என்பது கிறிஸ்துவோடு இறத்தலைக் குறிக்கும் என்று பவுலடிகளார் காட்டுவார். "திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகுதந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்" (உரோ. 6:3-4). இப்படியாக திருமுழுக்கை நிறைவேற்றுகின்றபோது கத்தோலிக்க திருச்சபை இரண்டு அடையாள காரியங்களை நடைமுறைப்படுத்துகின்றது. அவை வெளிப் பொருளின் அடையாளம் என கருதப்படுகின்றன. அவை:

அ. தண்ணீர்

ஆ. 'தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் நான் உம்மைக் கழுவுகிறேன்' என்ற மாத்திரைச் செபம்.

இந்த வேளையில், புதிய ஏற்பாடு திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவதற்கான கையேட்டுப் புத்தகம் இல்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டும். இரண்டாயிரம் ஆண்டு கிறிஸ்தவ பாரம்பரியமும், நாகரீகமும் திருவருட்சாதன கொண்டாங்களில் மாற்றங்களை உண்டு பண்ணியிருக்கின்றன. இறைவார்த்தை திருவருட்சாதனங்களின் உண்மைத் தன்மையையும், அவற்றிற்கு இயேசுவோடு இருக்கின்ற ஆழமான உறவையும் காட்டுகின்றது என்பதில் எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை. திருமுழுக்கு அக்காலத்தில் நற்செய்தி அறிவிப்பின் முக்கியமான கூறாக இருந்தபடியால் அது புதிய ஏற்பாட்டில் அதிகமாக உதாரணப்படுத்தப் பட்டுள்ளது. இயேசுவின் காலத்திற்கு பின் இரண்டாம் பரம்பரைக் கிறிஸ்தவர்கள் இந்தத் திருவருட்சாதனக் கொண்டாட்டங்களை தாங்கள் பெற்றுக்கொண்டதற்கு ஏற்ப அடுத்த தலைமுறைக்கு கடத்த கருத்தாய் இருந்தனர். "ஆகவே அன்பர்களே! எங்கள் வாய்மொழி வழியாகவோ திருமுகம் வழியாகவோ அறிவிக்கப்பட்ட முறைமைகளைப் பற்றிக் கொண்டு அவற்றில் நிலையாயிருங்கள்"(2தெச 2:15). இதனைத்தான் நாம் நமது கத்தோலிக்க தாய் திருச்சபையின் உயிருள்ள பாரம்பரியம் என்று அறிக்கையிடுகின்றோம். இனி திருவருட்சாதனங்களின் விவிலியப் பின்புலத்தை சிறு உதாரணங்களுடன் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ. திருமுழுக்கு

இதனை பழந் தமிழ், ஞானஸ்நானம் என்றழைத்தது. விவிலியத்தைப் போல திருமுழுக்கும் மிக மிக பழமையானது. திருமுழுக்கை தோறா அதிகமாகவே விவரிக்கின்றது. திருமுழுக்கு செமித்திய கலாச்சாரத்தில் சாதாரணமாக இருந்தது. இது ஒரு கழுவும் சடங்காக இருந்து பின்னர் தூய சடங்காக உருவெடுத்தது (வி.ப. 30:17-21, 40:30-33, லேவி. 17:15-16). நாமான் என்னும் சிரிய-அரமேய படைத்தலைவன் யோர்தான் நதியில் ஏழு முறை கழுவப்படுமாறு இறைவாக்கினர் எலிசாவினால் கேட்கப்பட்டார் (2அர. 5:10). யோவான் நற்செய்திப்படி இயேசு தன் சீடர்களின் பாதங்களை தண்ணீரால் கழுவினார் (யோவா. 13:2-20).

கிறிஸ்தவத்திற்கு முன்னர், புறவினத்தவர் யூத மதத்திற்குள் உள்வாங்கப்பட்டு தண்ணீரால் கழுவப்பட்டனர். திருமுழுக்கு யோவான் இப்படியான ஒரு சடங்கைத்தான் தன்னைத் தேடிவந்த சீடர்களுக்குக் கொடுத்தார். பிற்காலத்தில் ஆரம்ப கால திருச்சபை தன்னுடைய திருமுழுக்கு சடங்கில் இந்த நம்பிக்கையைப் பின்பற்றியது (தி.ப. 19:3-5). இயேசுவின் திருமுழுக்கு அனைத்து நற்செய்திகளிலும் மிக முக்கியமான அடித்தளத்தை நம்முடைய திருமுழுக்கிற்கு தருகிறது. இயேசுவின் திருமுழுக்கின் போது அவரில் இறங்கிய புறா, மற்றும் வானத்தில் கேட்ட ஒலி போன்றவை (மத். 3:13-17, மாற். 1:9-11, லூக். 3:21-22, யோவா. 1:29-31). புதிய பிறப்பையும், கடவுளின் ஏற்றுக்கொள்ளலையும் குறிக்கின்றன. திருமுழுக்கின் போது, கழுவுதல், கைவைத்து செபித்தல் மற்றும் தூய ஆவியின் வருகை போன்றவை மாறுபட்ட ஒழுங்கில் திருத்தூதர் பணிகள் நூல்களில் காட்டப்படுகின்றன (தி.ப. 8:14-17, 9:17-19, 19:5-6). பவுலுடைய சிந்தனையில் திருமுழுக்கு ஆண்டவரிலேயே முழுவதுமாக தங்கியிருக்கிறது. அத்தோடு திருமுழுக்கு கொடுக்கிறவர் எக்காரணத்திற்காகவும் உயர்ந்த வராக முடியாது என்பது அவரின் விசுவாசம் (1கொரி. 1:14-17). அத்தோடு திருமுழுக்கு மனித நாயகர்கள் வழிபாட்டை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதிலும் கருத்தாய் இருந்தார். திருமுழுக்கின் போது ஒருவர் தன்னுடைய பாவத்தில் இறந்து கிறிஸ்துவின் அருளில் புதிதாய் பிறக்கிறார் என்பது பவுலுடைய ஆழமான இறையியல் (உரோ. 6:1-11). ஆரம்ப காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட்ட விதம் அவ்வளவு தெளிவாக இல்லை. நீர் பற்றாக்குறை இருந்த எருசலேம் நகரில் மூவாயிரம் பேர் திருமுழுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற நிகழ்வு, இவர்கள் அனைவரும் நீரில் மூழ்கி திருமுழுக்கு பெற்றனரா என்ற கேள்வியை எழுப்புகிறது (தி.ப. 2:41). திருத்தூதர் பணிகள் நூலில் வருகின்ற எத்தியோப்பிய அதிகாரி திருமுழுக்கு பெற்றவிதமும் பல கேள்விகளை எழுப்பினாலும், அவர் நீரில் மூழ்கி திருமுழுக்கு பெற்றிருக்கலாம் என நம்பலாம் (தி.ப. 8:36-38). திருமுழுக்கை குறிக்கும் கிரேக்கச் சொல் பப்திட்ஸ்சோ நீருக்குள் மூழ்குதலையே குறிக்கிறது. இருப்பினும் இதன் அர்த்தம் பிற்காலத்தில் மாறுபட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. குழந்தைகளுக்கான திருமுழுக்கை புதிய ஏற்பாட்டைக் கொண்டு நிரூபிப்பதோ அல்லது மறுப்பதோ இலகுவாக இருக்காது. திருத்தூதர் ஒரு சில குடும்பங்களுக்கு திருமுழுக்கு கொடுத்தபோது அக்குடும்பத்தில் அனைவருக்கும் திருமுழுக்கு கொடுத்திருக்கலாம் என சிலர் நம்புகின்றனர் (தி.ப. 18:8, 1கொரி. 1:16). திருமுழுக்கின் வகையும், முறையும் வேறுபட்டாலும், திருமுழுக்கு என்பது, எக்காலத்திலும் ஒன்றே என்பது திருச்சபையின் கருத்தாயிருக்கிறது (எபே. 4:5).

## ஆ. ஒப்புரவு

ஒப்புரவு திருவருட்சாதனத்திற்கு அத்திவாரமாய் பழைய ஏற்பாட்டில் இருப்பது, ஒரே விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளுதலாகும். இதனை விசுவாசத்தை அறிக்கையிடல் என்று கூட சொல்லலாம். இது ஒருவர் கடவுளுக்கு அர்ப்பணமானவர், அல்லது கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்ட விசேடமானவர் என்ற உணர்வைக் கொடுத்தது. முக்கியமான வேளைகளில் இது ஒரு செபமாக அறிக்கையிடப்பட்டது (இ.ச. 6:4-9).

ஆரம்ப காலம் தொட்டே திருச்சபை தனக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் உள்ளது என்று நம்பியது. இது தன்னுடைய அதிகாரம் என்பதை விட, இயேசுவின் அதிகாரமாகவே பார்க்கப்பட்டது. “மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்” என்றார் (மத். 9:6). “மண்ணுலகில் நீங்கள் தடைசெய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடைசெய்யப்படும், மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.” இந்த அதிகாரம் திருத்தூதர்கள் வழியாக திருச்சபைப் பணியாளர்களுக்கு, முக்கியமாக இன்று குருக்கள், ஆயர்களுக்கு இருப்பதாக பாரம்பரியமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதனை தனிமனிதருடைய அதிகாரம் என்பதைவிட, இயேசுவினுடைய அளவற்ற அன்பின் அடையாளம் என்றே அடையாளப்படுத்த வேண்டும். பழைய ஏற்பாட்டில் பாவம் செய்த நபர், தன்னுடைய பாவத்தை நீக்க பல பாவ நீக்க பலிகளையும், செயற் பாடுகளையும் செய்ய கேட்கப்பட்டார். இது அவர் மீண்டும் தன் தூய்மைக்கு, திரும்பி வருவதற்கானதும், அத்தோடு அவர் மேல் முழு சமுதாயமும் அக்கறையாயுள்ளது என்பதற்குமான அடையாளம் (லேவி. 19:20-22).

இயேசு விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணுடன் நடத்திய உரையாடல் ஒப்புரவு அருட்சாதனத்திற்கான பின்புலம் என அறியப்படுகிறது. பல இடங்களில் இயேசு பலருடைய பாவங்களை மன்னிக்கிறார், அத்தோடு அதற்கான அதிகாரம் தனக்கு உண்டு என்பதையும் அச்சமின்றி நியாயப்படுத்துகிறார் (மத். 9:6, மாற். 2:10, லூக். 5:24).

இந்தப் பணியை இயேசுவுடைய குருத்துவத்தை பகிர்கின்ற குருக்கள், அவருடைய உடலாகிய திருச்சபையில் செய்கிறார்கள் என்பது பாரம்பரியம் கலந்த நம்பிக்கை. பாவத்தின் கூலி சாவு, இந்த சாவை தவிர்க்க இந்தத் திருவருட்சாதனம் செயலாற்றுகிறது (உரோ. 6:23).

## இ. நற்கருணை

நான்கு நற்செய்திகள், மற்றும் ஏனைய புதிய ஏற்பாட்டு நூல்கள் இந்த திருவருட்சாதனத்தின் முக்கியத்துவத்தையும் அதன் வரலாற்றையும் தமது வாசகர்களின் தேவைக்கேற்ப அழகாக விவரித்துள்ளன. கண்ணுக்குத் தெரியக்கூடிய வெள்ளை அப்பமும், திராட்சை இரசமும், உயிருள்ள இயேசு ஆண்டவரின் உடலாகவும் இரத்தமாகவும் மாற்றம் பெறுகின்றன. சமநோக்கு நற்செய்திகள் மத்தேயு, மாற்கு, மற்றும் லூக்கா, இயேசு இந்த திருவருட்சாதனத்தை தனது இராப்போசன விழாவில் உருவாக்கிய தாக காட்டுகின்றன (மத். 26,26-30, மாற். 14,22-26, லூக். 22,15-20). இந்த விழாவிற்கும் இஸ்ராயேலரின் பாஸ்கா விழாவிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. விடுதலைப்பயண நூல், பாஸ்கா விழா பற்றி மோசே கொடுத்த சட்டங்களையும், நியமங்களையும் சித்தரிக்கின்றது. இந்த பாஸ்கா விழா முன்நாளில் இவர்களிடையே வழக்கிலிருந்த அறுவடை விழா, மற்றும் முதல் மந்தையைக் காணிக்கையாக்கும் விழா போன்றவற்றிலிருந்து உருவானது. இந்த பாஸ்காதான் நற்கருணையின் அடித்தளமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நற்கருணையின் இறையியலும் ஆழமும் இஸ்ராயேலின் பாஸ்கா விழாவில் இருந்து விசாலமாகியது. ஆண்டவரின் நற்கருணையில் பலியிடப்படுவது மிருகமோ அல்லது அதன் இரத்தமோ கிடையாது. மாறாக, இங்கே பலியிடப்படுவது ஆண்டவரின் சொந்த உடல். அதே வேளை, பலியிடுபவரும் அதே ஆண்டவர்தான். யோவான் நற்செய்தியாளர் இன்னும் வித்தியாசமாக இந்த நற்கருணை விழா கல்வாரியில் சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது என்று காட்டுவார். ஆண்டவருடைய விலாவிலிருந்து பெருக்கெடுத்த இரத்தமும் தண்ணீரும்தான் மற்றய திருவருட்சாதனங்களின் மூலம் என்று இறையியலாளர்கள் காட்ட முயற்சி செய்கின்றனர். (யோவா. 19:34-35). இயேசுவுடைய உயிர்ப்பின் பின்னர் இந்த திருவருட்சாதனம் திருச்சபையால் கொண்டாடப்பட்டதற்கான பல சான்றுகள் உள்ளன. பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் இதன் முக்கியத்து வத்தையும், அத்தோடு இந்த கொண்டாட்டம் ஒழுங்காக கொண்டாடப்பட வேண்டிய தேவையையும் சொல்கிறார் (1கொரி. 11:17-34). இந்தக் கொண்டாட்டத்திற்கு முன், அகாப்பே உணவுப் பகிர்வு என்ற ஒரு கொண்டாட்டமும் நடந்திருக்கிறதாக விவிலிய ஆய்வுகள் காட்டுகின்றன. நற்கருணைக்கு கிரேக்க மொழி பாவிக்கின்ற விவிலியச் சொல் எயூகறிஸ்தியா, இருப்பினும் இந்தச் சொல் நற்கருணைக் கொண்டாட்டத்தோடு தொடர்பு பட்டு புதிய ஏற்பாட்டில் பாவிக்கப்படவில்லை. ஆரம்ப கால திருச்சபையின் மிக முக்கியமான நூல்களாக 'டிடாக்கே', அந்தியோக்கு இஞ்ஞாசியார் எழுதிய பிலதெல்பியருக்கான கடிதம், மற்றும் துாய மறைசாட்சியர் யஸ்டின் எழுதிய வேதபாதுகாப்பு போன்றவை இந்த எயூகறிஸ்தியா என்ற சொல் நற்கருணைக் கொண்டாட்டத்திற்குப் பாவிக்கப்பட்டதற்கு சில ஆரம்ப கால சாட்சியங்களாகும்.

## ஈ. உறுதிபூசுதல்

உறுதிபூசுதல் தூய ஆவியாருடன் நெருங்கிய தொடர்புடைய திருவருட்சாதனம். இந்தத் திருவருட்சாதனத்தின் வாயிலாக ஒருவர் கிறிஸ்துவின் போர் வீரராகி அவரது இறையரசைப் பறைசாற்றும் வீரராகிறார். கென்பமட்சியோனெம் என்ற இலத்தின் சொல் உறுதிபடுத்துதலைக் குறிக்கின்றது. அதாவது ஒருவர் திருமுழுக்கில் பெற்றுக்கொண்ட அழைப்பை இந்தத் திருவருட்சாதனம் உறுதிப்படுத்துகின்றது. இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவிலியப் பின்புலமாக பெந்தகோஸ்து விழாவில் தூய ஆவியார் நாக்கு வடிவில் செபித்துக்கொண்டிருந்த இயேசுவின் சீடர்கள் மேல் இறங்கியதையும், இதனால் அவர்கள் வல்லமை பெற்றதையும் நல்ல உதாரணமாக எடுக்கலாம் (தி.ப. 2:1-12). இந்தத் திருவருட்சாதனம், கரங்களை தோள்மேல் வைத்தல், மற்றும் நெற்றியில் முத்திரை வரைவதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது. திருத்தூதர் பணிகள் (தி.ப. 19:3-6), யோவானுடைய திருமுழுக்கு, மற்றும் உறுதிபூசுதலுக்கும், இயேசுவுடைய திருவருட்சாதனங்களுக்கு மிடையிலான உண்மையான வேறுபாட்டை விளக்குகின்றது (எபி. 6:2).

இதனைவிட பழைய ஏற்பாட்டிலும் ஒருவர் மீது தூய ஆவியாரின் ஆட்கொள்கை கடவுளுடைய விசேட அடையாளமாகக் கருதப்பட்டது. எசாயாவின் இறைவாக்கின்படி யாக்கோபு (இஸ்ராயேல்) ஆண்டவரின் ஆவியைப் பெற்றுக்கொள்வதன் வாயிலாக அது தேர்ந்து கொள்ளப்பட்ட இனம் என்ற அடையாளத்தை மீளவும் நினைவுபடுத்துகின்றது. எசேக்கியேலின் இறைவாக்குப்படி ஆவியாருடைய பொழிகை இஸ்ராயேலை கைவிடப்பட்ட நாடு என்ற தண்டனையிலிருந்து மீட்டெடுக்கிறது. ஆண்டவரின் ஆவியை அனைவரும் பெற்றுக்கொள்வர் என்ற இறைவாக்கை அழகாகக் காட்டுபவர் இறைவாக்கினர் யோவேல் (யோவே. 2:28). இவ்வாறு, உறுதி பூசுதல் நேரடியாக திருச்சபையின் சடங்கு முறைகளோடு விவிலியத்தில் காணப்படாவிடினும், உறுதிபூசுதலுடைய பின்புலம் விவிலியத்தில் ஆழமாகவே காணப்படுகின்றது.

## உ. திருமணம்

இந்தத் திருவருட்சாதனம் பல உதாரணங்களோடு பலமாக விவிலியத்தில் காணப்படுகிறது. திருமணத்தை பெண்வாங்குதல் என்று பழைய ஏற்பாடு குறிப்பிட்டாலும், தொடக்க நூல் முதலே திருமணத்தின் மேன்மை அழகாகக் காட்டப்பட்டுள்ளது. மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று மனிதனுக்கு சமூக சாயலை ஆண்டவர் தாமே கொடுக்கிறார். அத்தோடு மனிதன், கடவுள் தனக்கு உருவாக்கிய மனைவியை தன் சதையாகவும், எலும்பாகவும் காண்கிறான். இதனால் மனைவி மனிதனின் உண்மையான பிரதிபலிப்பாக மாறுகிறாள். அதேவேளை இவர்கள் இருவரும் இனி இருவரல்ல, மாறாக, ஒருடல் என்ற உண்மை காட்டப்படுகிறது. இஸ்ராயேல் சமூகத்தின் வளர்ச்சியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தங்கள் அயலவரோடு வளர்த்துக் கொண்ட நட்பும், அவர்கள் சந்தித்த சமூகவியல் பிரச்சனைகளும் இந்த அழகான திருமண அழைப்பை பல கேள்விகளுக்குள் உட்படுத்தின. இதன் முக்கியமான பிரச்சனையாக மணமுறிவைக் கருதலாம். இனி இவர்கள் ஈருடல் அல்ல ஒருடல் என்ற எண்ணம் மறைந்து, பெண்கள் வீட்டுவேலைகளைச் செய்யும் பணிப் பெண்களாயினர். இதனால் விவாகரத்திற்கான காரணங்களும், தேவைகளும் மிகவே பெரிதாகின. எத்தனை வயதில் இஸ்ராயேலர்கள் திருமணம் முடித்தனர் என்பது விவிலியத்தில் தெளிவாக இல்லை. ஆனால் அவர்கள் தங்களது இளம் பருவத்தில் இந்தத் திருமண பந்தத்தில் இணைந்தனர் என்பது மட்டும் தெளிவாகின்றது. ஆரம்ப காலம் தொடங்கியே திருமணத்தின் பின்னர் கணவன் வீட்டுத் தலைவராகவும் மனைவியும் பிள்ளைகளும் அவருடைய அதிகாரத்தின் கீழும் வைக்கப்பட்டனர். ஆரம்ப கால இஸ்ராயேல் சமூகத்தில் பலதாரப் பழக்கம் அங்காங்கே இருந்தாலும் பிற்கால இஸ்ராயேல் சமுதாயத்தில் பலதார பழக்கம் இல்லாமல் போனது. உரோமைய-கிரேக்க காலத்தில் இந்தப் பலதார பழக்கம் இஸ்ராயேல் சமூகத்தில் நிரந்தரமாக இல்லாமல் போனது. இதற்கு நல்ல உதாரணமாக, புதிய ஏற்பாடு ஒருவனுக்கு ஒருத்தி என்ற சிந்தனையையே முன்னிறுத்து கின்றது.

இயேசு தன்னுடைய படிப்பினைகளில் திருமணத்தை அருட்சாதன நிலைக்கு உயர்த்தினார் எனச் சொல்லலாம். இயேசு தொடக்க நூல் காட்டும் தூய்மையான நிலைக்கு திருமணத்தை எடுத்துச் சென்றதன் ஒரு அடையாளம்தான், அவர் விவாகரத்தை தீமை என்று வர்ணிப்பது. இயேசுவினுடைய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, பிற்காலத்தில் திருமணத்தை ஒரு மறைபொருளாகவும் அதனை கிறிஸ்து மற்றும் திருச்சபைக்கிடையிலான உறவுடன் ஒப்பிட்டும் காட்டுவார் தூய பவுல். பவுலின் சிந்தனைப்படி திருமணம் ஒரு அழியாத உடன்படிக்கை, அங்கே கணவன் கிறிஸ்து போன்றவர், அத்தோடு மனைவி திருச்சபை போன்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊ. குருத்துவம்

குருத்துவம் விவிலியத்தைப் போல காலத்தால் மிகவும் பழமையானது. தொடக்கமும் முடிவும் இல்லாத மெல்கிசதேக் குருத்துவத்தின் ஆச்சரியத்தை விவிலியத்தின் ஆரம்பத்திலே வெளிப்படுத்துகிறார் (தொ.நூ. 18:14-20). பிற்காலத்தில் இந்த மெல்கிசதேக் இயேசுவின் குருத்துவத்தை நினைவூட்டுகிறார் என்று எபிரேயர் புத்தகத்தின் ஆசிரியர் விளக்க முயலுவார் (எபி. 6:20). விவிலியம் ஆரோன் குடும்பத்தையும் லேவி குலத்தையும் குருகுலமாகக் காட்டுகிறது. இவர்கள் குருத்துவப் பணிக்காக விசேட விதமாக தெரிவு செய்யப்பட்டதாக விடுதலைப் பயண நூலும் லேவியர் புத்தகமும் விவரிக்கின்றன. இவர்களைவிட அரசர்கள் காலத்தில் சில தனிபட்ட குரு குடும்பங்கள் இருந்திருக்கின்றன. இதில் சாதோக் என்னும் குரு, தாவீதின் காலத்தில் ஒரு முக்கியமான குருவாக இருந்திருக்கிறார் (2சாமு. 8:17). இஸ்ராயேலின் குருத்துவம், அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த மொசப்பதேமிய, கானானிய மற்றும் எகிப்திய குருத்துவத்தின் தாக்கங்களை தன்னகத்தே கொண்டிருப்பதை ஆய்வாளர்கள் கண்டுகொள்கின்றனர். இரண்டாம் எருசலேம் காலத்திற்கு பின் குருத்துவம் அரசியலுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. மக்கபேயர் காலத்திற்குப் பின், அரசியல் தலைமை மெதுவாக குருத்துவத்துடன் இணைந்து கொண்டது. இப்படியாக இயேசு ஆண்டவர் பிறந்த போதே குருத்துவம் என்னும் அமைப்பு, பலமான அமைப்பாக இஸ்ராயேலில் மக்களினத்தில் இயங்கிவந்தது.

திருமுழுக்கு யோவானின் தந்தை சக்கரியா, ஒரு குருவாகக் காட்டப்படுகிறார் (லூக். 1:5). இயேசு பிறப்பால் குரு குலத்தில் பிறந்ததாக புதிய ஏற்பாடு காட்டவில்லை, மாறாக அவர் தாவீதின் குலமான, யூதா குலத்தில் பிறந்ததாகவே அவருடைய பரம்பரை அட்டவணைகள் காட்டுகின்றன (மத். 1:1-17: லூக். 3:23-38). குருகுலத்தில் பிறக்காத இயேசுதான் உண்மையான தலைமைக் குரு என்று எபிரேயர் ஆசிரியர் காட்டுகிறார். இயேசு எப்போது திருவருட்சாதனமாக குருத்துவத்தை ஏற்படுத்தினார் என்பது மிக இலகுவான தேடலல்ல. அதிகமான இறையியலாளர்கள் இறுதி இராவுணவை, இயேசு குருத்துவத்தை ஏற்படுத்திய நிகழ்வாகக் கருதுகின்றனர். இந்த விழாவில் கொண்டாடப்பட்ட நற்கருணை இக் குருத்துவத்துடன் தொடர்புபட்டுப் பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவத்தின் படிநிலைகளான திருத்தொண்டர் நிலையும் ஆயர்த்துவமும் வெவ்வேறு படி நிலைகளில் புதிய ஏற்பாட்டின் திருமுக நூல்களில் அங்காங்கே காணப்படுகின்றன. இன்று குருத்துவம் பல இறையியல் வளர்ச்சிகளைக் கண்டு, திருத்தொண்டர் நிலை முதலாம் நிலையாகவும், ஆயர் நிலை இறுதியான நிலையாகவும் வளர்ந்திருக்கிறது.

## எ. நோயில் பூசுதல்

நோயில் பூசுதல் என்னும் திருவருட்சாதனம், நல் மரணத்திற்கான ஆயத்தம் என்று அதிகமாக கிறிஸ்தவர்களால் நம்பப்படுகிறது. இதனைவிட, இது நோயிலிருந்து குணமாகுதலுக்கான ஓர் ஆன்மீக ஆசீர்வாதம் என்பதும் திருச்சபையின் படிப்பினை. எண்ணெய் அக்காலத்தில் குணமளிக்கும் முக்கியமான ஓர் இயற்கை வைத்தியப் பொருளாக பாலஸ்தீனத்தில் பாவனையில் இருந்தது. இந்த வழக்கம் இயேசுவின் காலத்திலும் இருந்ததை அவர் நல்ல சமாரியர் உவமையில் குறிப்பிடும் அடையாளம் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம். விவிலியத்தில், அதுவும் புதிய ஏற்பாட்டில், யாக்கோபு எழுதிய திருமுகத்தில் நோயில் பூசுதல் ஒரு திருவருட்சாதனச் சாயலை அழகாகக் காட்டுகிறது. நோயுற்றவர்கள், மூப்பர்களால் எண்ணெய் தடவி, அத்தோடு அவர்களின் வேண்டுதல்களால் குணமடைவார்கள் என்று யாக்கோபு எழுதுவது, ஆரம்ப காலத்தில் இந்த செயற்பாடு வழக்கிலிருந்ததைக் காட்டுகிறது. வழித்துணை உணவு என்னும் இறுதியான நற்கருணை வழங்கல் பிற்காலத்தில் நோயில் பூசுதலுடன் சேர்த்து நோயாளருக்கும் அல்லது மரணப்படுக்கையிலிருப்பவருக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு நோயில் பூசுதல், ஒரு குணமாக்கல் அடையாளம் என்பதும், அது விவிலியத்தில் நிலைநிறுத்தப்படுகிறது என்பதும் புலப்படுகிறது.

**முடிவாக,** திருவருட்சாதனங்கள் திருச்சபையில் அருட் சொத்துக்கள். எமது பாரம்பரிய நம்பிக்கையின் படி இவற்றின் நிறுவுனர் இயேசு ஆண்டவர் ஒருவரே. நாம் இன்று பெற்றுக்கொள்கின்ற திருவருட்சாதனங்கள் அப்படியே விவிலியத்தில் காணப்படாவிடினும், அவற்றின் ஆரம்ப கால நிலைகளை விவிலியத்தில் காணலாம். இந்த கண்ணுக்கு தெரியா அருள் அடையாளங்கள், கண்ணுக்கு தெரியும் சில அடையாளங்கள், மாத்திரைச் செபங்கள், வழிபாட்டு முறைகள் மூலமாக நம்முடைய விசுவாசப் பயணத்தில் மிக முக்கிய சக்திகளாக செயலாற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ வாழ்வில் புகுமுக அருட்சாதனங்கள்

அருட்சகோதரன் பி.றீ.நிதர்சன்
2ம் வருட இறையியல்

## அறிமுகம்

பிறப்பு ஒரு சமூகத்துக்கான நேரடி நுழைவுச்சீட்டு அல்ல; மாறாக வெறும் தொடக்கமே. பல நிகழ்வுகளையும் அச்சமூகத்தின் மரபுகளையும் நன்கு கற்றறிந்த பின்னே ஒரு மனிதன் குறிப்பிட்ட குழுமத்தின் நிரந்தர அங்கத்தவன் என்ற அந்தஸ்தைப் பெறுகிறான். இவற்றில் மிகமுக்கியமானவை "புகுமுக மரபு" அல்லது "தொடக்க மரபு" (Rites of initiation). இம்மரபு தான் ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையிலே ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுக்கிறது. இம்மரபுகளுக்கூடாக பயணித்த மனிதனையே ஒரு சமூகம் முதிர்ச்சிபெற்ற முழுமனிதனாக அடையாளம் காண்கிறது.

தொடக்ககால கிரேக்க அல்லது எகிப்திய சமூகத்திலே காணப்பட்ட புகுமுக சடங்கானது மிகவும் கடுமையானதாகவும், அச்சடங்குகளை நிறைவேற்றத் தவறுபவன் சமூகத்தின் பிரஜை என்ற ஸ்தானத்தை இழந்தவனாகவும் கணிக்கப்பட்டான். தொடக்ககால புகுமுக மரபானது பெரும்பாலும் ஆண்களை மையப்படுத்தியதாகக் காணப்பட்டது.

இம்மரபு அல்லது சடங்கானது இறந்து போன ஒன்றல்ல. மாறாக, இன்றும் பல சமூகத்தவர்களிடையே அல்லது இனக்குழுக்களிடையே உயிரோட்டத்தோடு பின்பற்றப்பட்டு வருகின்ற ஒன்றாக காணப்படுகிறது. புகுமுக மரபு அல்லது சடங்கானது ஒவ்வொரு இனத்தின் அல்லது சமூகக்குழுவின் அடையாளத்தையும் தனித்துவத்தையும் சுமந்தேதான் காணப்படுகிறது.

## 1. கிறிஸ்துவுக்குள் புகுதல்

கிறிஸ்தவ வாழ்வில் அல்லது கிறிஸ்தவர்களின் வாழ்வின் புகுநிலை (initiation) என்று கருதுகின்ற போது அது பெரும்பாலும் இயேசுக் கிறிஸ்துவின் அருள்வாழ்வில் பங்கு பெறுதலையே குறித்துக்காட்டுகின்றது. இதையே "கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு" (யோவா. 3:3-6). என்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக ஒரு குழந்தை பிறக்கின்றபோது அது தன் பெற்றோருக்குப் பிள்ளையாகவும், சகோதரர்களுக்கு உடன் பிறப்பாகவும், ஒரு குழுமத்தின் அங்கத்தவனாகவும், ஒரு நாட்டின் குடிமகனாகவும் மாறுகின்றான். ஆனால் அக்குழந்தை கிறிஸ்துவுக்குள் பிறக்கின்ற பொழுதே அவருடைய அருள் வாழ்வின் பங்காளியாகின்றது; அவரால் உருவாக்கப்பட்ட இறையரசின் அங்கத்தவனாக மாற்றப்படுகின்றது. ஆகவே திருச்சபையில் புகுமுக நிலை என்பது வெறுமனே வெளியளவிலான மதமாற்றம் அல்ல; மாறாக தூய ஆவியால் தூண்டப்பட்ட ஓர் அருள் வாழ்வுக்குள் நுழைதலையே இது குறித்துக் காட்டுகின்றது.

## 2. புகுநிலை அருட்சாதனங்கள்

திருச்சபையில் புகுநிலை இடம்பெறுவது திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், திவ்விய நற்கருணை என்ற மூன்று அருட்சாதனங்களின் ஊடாகவே. இங்கே கவனிக்கப்படவேண்டிய விடயம் ஒன்று என்ன வென்றால்; சாதாரணமாக இம்மூன்று அருட்சாதனங்களையும் நாம் ஒருமுறை மட்டும் பெறும் அருட்சாதனங்களோடு அடையாளம் காண்பது தான். ஒரு முறை மட்டும் பெற்றுக்கொள்ளும் அருட்சாதனம் என்பது வேறு, புகுமுக அருட்சாதனம் என்பது வேறு. ஒருமுறை மட்டும் பெறும் அருட்சாதனங்களாக: திருமுழுக்கு, உறுதிபூசுதல், குருத்துவம் என்பவையே கருதப்படுகின்றன. இங்கு நாம் கலந்தாய்வது புகுமுக அருட்சாதனங்கள் பற்றியே.

ஆரம்பகாலத்திருச்சபையில் இம்மூன்று அருட்சாதனங்களும் தனித்தனி அருட்சாதனங்களாக வழங்கப்படவில்லை. மாறாக, அவை ஒரு பெரும் நிகழ்வாகவே கொண்டாடப்பட்டன அல்லது நிறைவேற்றப்பட்டன. அத்தோடு அக்காலத்திருச்சபையில் இம்மூன்று அருட்சாதனங்களையும் முழுமையாக பெறாதவர்கள் முழுக்கிறிஸ்தவர்களாக அடையாளம் காணப்படவில்லை. காரணம், திருமுழுக்கின் மூலம்தான் ஒருவன் கிறிஸ்துவின் உடலாகின்றான்; அதேவேளை பாவத்தில் இருந்து மீட்கப்பட்ட புதிய ஆதாமாக உருவெடுக்கின்றான். உறுதிப்பூசுதலின் மூலம் மனிதன் தூய ஆவியின் துணையோடு உயிரோட்டம் பெறுகின்றான்; இறுதியாக, நற்கருணை மூலம் அன்பின் கோயிலாகவும் பகிர்தலின் விளைநிலமாகவும் மாற்றப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சாதனங்கள் ஏழு இருந்தாலும், ஒருவர் கிறிஸ்தவ வாழ்வில் அடியெடுத்துவைக்கத் தேவையானவை திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை ஆகிய மூன்றும் ஆகும். ஏனெனில் கிறிஸ்தவ வாழ்வு:

i. திருமுழுக்கில் தொடக்கி வைக்கப்படுகின்றது;

ii. உறுதிப்பூசதலில் அரும்புகிறது;

iii. நற்கருணையில் மலர்ந்து மணம் வீசுகின்றது. (காண். அருட்திரு. எஸ். ஆரோக்கியராஜ்: திருவழிபாடு ஓர் அறிமுகம்)

## 2.1. கிறிஸ்தவ புகமுக அருட்சாதனங்களின் இயங்குதிறன் (The Dynamism of Christian Initiation)

இது வெறுமனே இறைவிசவாசத்தின் தொடக்கம் மட்டுமல்ல, மாறாக, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரோடு வாழப்படுகின்ற ஒரு வாழ்வின் தொடக்கமாகும். இதுவரை காலமும் மீட்பின் வரலாற்றில் பார்வையாளர்களாக இருந்த நாம் புகுமுக அருட்சாதனங்களின் மூலம் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பிலே பங்குபற்றும் பங்காளிகளாக மாறுவதோடு மீட்பு வரலாற்றில் சாட்சிகளாகவும் மாறுகின்றோம்.

கிறிஸ்தவ புகுமுக அருட்சாதனங்களின் மூலம் ஒரு மனிதனின் அனைத்து செயற்பாடுகளும் தூய ஆவியின் ஆழுகைக்குட்பட்டதாக மாறுகின்றது. கிறிஸ்தவ புகுமுக அருட்சாதனங்களின் தொழிற்பாடுகளில் மூன்று தொழிற்பாடுகள் (Operations) மிகமுக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

i. புகுமுக அருட்சாதனங்களின் மூலம் இறந்து உயிர்த் தெழுந்த இயேசுகிறிஸ்துவுக்குள்ளே வாழத் தொடங்குகின்றோம்.

ii. கிறிஸ்து இயேசுவை தலைவராக ஏற்றுக்கொண்டு பயணிக்கும் விசுவாசிகள் கூட்டத்தோடு சங்கமமாகின்றோம்.

iii. மூவொரு கடவுளின் குழுமத்துள்ளே வாழத் தொடங்குகின் றோம்.

## 3. புகுமுக அருட்சாதனங்களின் தொடக்கம் - திருமுழுக்கு

"இதுவே கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கமாகும். இதன் வழியாகவே இறைவன் ஒரு மனிதனின் வாழ்வில் நுழைகின்றார்; அவரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கின்றார்; அவர் பாவங்களை கழுவிப் போக்குகின்றார்; அவரைத் தம் பிள்ளையாக மாற்றிக்கொள்கின்றார்; அருள் உயிரை அவருக்கு ஊட்டுகின்றார்; புதுவாழ்வு தருகின்றார்; அருள் உறவில் அவருக்கு பங்கு அளிக்கின்றார்'' (காண். திருவழிபாடு ஓர் அறிமுகம்...). திருமுழுக்கு அருளடையாளத்தையே இயேசுக்கிறிஸ்து ஏற்படுத்தினார் என்பது தாய்திருச்சபையின் ஆணித்தரமான படிப்பினை. இதற்கு விவிலியத்தில் இருந்து ஆதாரங்களாக:

i. இயேசு தான் பெற்றுக்கொண்ட திருமுழுக்கு (மாற். 1: 9)
ii. நிக்கதேமுவுடனான இயேசுவின் உரையாடல் (யோவா. 3:5)
iii. பணிபுரிய சீடர்களை அனுப்பியது (மாற். 16: 15-18)

இம் மூன்றையும் விசேடமாக குறிப்பிட்டுக்காட்டலாம்.

## 2.3.1. திருமுழுக்கில் பாவிக்கப்படும் அடையாளங்கள்

| | |
|---|---|
| தண்ணீர் | – புதுவாழ்வின் அடையாளம் |
| ஆயத்த எண்ணெய் | – பேயை ஓட்டி வலிமை அளித்தல் |
| விசுவாச அறிக்கை | – மூவொரு இறைவனை வெளிப்படையாக அறிக்கையிட்டு ஏற்றுக்கொள்வதன் அடையாளம் |
| திருத்தைலம் | – அருட்பொழிவின் அடையாளம் |
| பாஸ்கா திரி | – உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளம் |
| எரியும் திரி | – பாவ இருள் நீக்கி அருள் ஒளி பெற்ற ஆத்மாவின் அடையாளம் |
| வெள்ளைத்துணி | – தூய உள்ளத்தின் அடையாளம் |

## 2.3.2. திருமுழுக்கினால் விளையும் பயன்கள்

### i. பாவமன்னிப்பு

திருமுழுக்கின்போது முதன்மையாக சென்மபாவத்தில் இருந்து விடுதலை பெறுகின்றோம். அத்தோடு செயல்வழிப் பாவம் அனைத்தி லிருந்தும் விடுதலை பெறுகின்றோம். ஆகவே திருமுழுக்கு ஒரு மனிதனை பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து அருள்வாழ்வுக்கு இட்டுச் செல்கின்றது.

### ii. கிறிஸ்துவோடு ஒன்றிணைகின்றோம்

பாவத்தின் கட்டுக்களில் இருந்து விடுதலைபெற்ற நிலையில் ஒரு மனிதன் கிறிஸ்துவுடனான உறவுக்கு தகுதியுள்ளவன் ஆகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் "நீங்கள் திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவை அணிந்துள்ளீர்கள்" என குறிப்பிடுகின்றார் (கலா. 3:27). ஆகவே திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவுக்குள்ளே புதுவாழ்வை வாழத் தொடங்குகின்றான்.

**iii. தூய ஆவியின் வரங்கள்**

"ஏனெனில் யூதரானாலும் கிரேக்கரானாலும் அடிமைகளானாலும் உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம்" (1கொரி. 12: 13). பவுல் கூறுவதைப் போல தூய ஆவியாரின் இருப்பும் அவரது ஆற்றுகையும் திருமுழுக்குப் பெற்ற ஒரு மனிதனிடத்தில் தனித்துவமானதாகும்.

**iv. கடவுளின் பிள்ளை என்ற பேறு**

திருமுழுக்கின் மூலம் நாம் திருத்துவத்தின் அருள்வாழ்வில் பங்கு பெறுகின்றோம். திருமுழுக்கின் மூலம் நாம் கிறிஸ்துவோடு ஒன்றாகி, தூய ஆவியின் அருளோடு கடவுளின் பிள்ளைகளாகின்றோம்.

**v. திருச்சபையில் அங்கத்தவராகின்றோம்**

ஒரு மனிதன் எப்போது பாவத்தில் இருந்து கழுவப்படுகின்றானோ அப்போதே அவன் திருச்சபையில் அங்கத்தவராகும் தகுதி பெறுகின்றான்.

## 4. திருமுழுக்கின் நிறைவான உறுதிபூசுதல்

தாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ வாழ்வில் நிலைத்திருக்க ஒரு கிறிஸ்தவரை இதன் வழியாகவே இறைவன் விசுவாசத்தில் உறுதிப் படுத்துகின்றார். அவ்விசுவாசத்திற்கேற்ற சாட்சிய வாழ்வை வாழச் செய்கின்றார். இதற்கு உதவியாக அவருக்கு தூய ஆவியாரையும் அந்த ஆவியாரின் கொடைகளையும் தாராளமாகப் பொழிகின்றார்.

2000 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பெந்தக்கோஸ்து நிகழ்ச்சியை மீண்டும் புதுப்பித்துச் செயல்படுத்துவதே உறுதிபூசுதல் கொண்டாட்டம் ஆகும். உறுதிபூசுதல் பெறுவோர் திருத்தூதர்களைப் போல தூய ஆவியால் நிரப்பப்பட்டு புனிதப்படுத்தப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1. புகுநிலையின் இரண்டாம் நிலை

திருமுழுக்கில் தொடங்கிய இறைவாழ்வு உறுதிபூசுதலிலே மலர்ச்சியடைகிறது. அதேவேளை திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவின் மறையுடலில் இணைக்கப்பட்டவர்கள், அம்மறையுடலை கட்டியெழுப்பும் ஆற்றல் பெறுகின்றார்கள். இன்னும் திருமுழுக்கில் ஞானப்பெற்றோரின் மூலம் கொடுக்கப்பட்ட திருமுழுக்கு வாக்குறுதி சுயவிருப்பில் புதுப்பிக்கப்படுகின்றது. மேலும், திருமுழுக்கில் பெற்ற அழியாத முத்திரை இப்போது மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றது. எனவே, இது ஒரு தனி அருட்சாதனம் என்பதிலும் பார்க்க புகுநிலையின் இரண்டாம் நிலை அருட்சாதனம் என்றே கூறலாம்.

## 4.2. உறுதிபூசுதலின் அடையாளங்கள்

| | |
|---|---|
| கிறிஸ்மா தைலம் பூசுதல் | : அருள் பொழிவின் அடையாளம் |
| தலைமீது கைகளை வைத்தல் | : தூயஆவியாரையும் அவரது கொடைகளையும், கனிகளையும் வழங்குவதன் அடையாளம். |

## 4.3. உறுதிபூசுதலின் பயன்கள்

- இவ்வருட்சாதனத்தின் மூலம் முதிர்ச்சியடைந்த ஒரு கிறிஸ்தவனாக மாறுகின்றோம்.
- நற்செய்திக்குச் சான்று பகரும் ஆற்றல் கிடைக்கின்றது. அத்தோடு நீதியுள்ள ஒரு சமுதாயத்தை இம்மண்ணகத்திலேயே படைக்கவும், இறையரசைக் கட்டியெழுப்பவும், புதிய வானகமும் புதிய பூமியும் படைக்கவும் ஆற்றல் கிடைக்கின்றது.
- தூய ஆவியின் கனிகளும், கொடைகளும் தாராளமாகக் கிடைக்கின்றன.

## 5. பாஸ்கா மறைபொருள் நற்கருணை

திருப்பலி ஒரு நற்கருணைக் கொண்டாட்டமாகும். காரணம், இத் திருப்பலியில்தான் நாம் நற்கருணை என்னும் அருட்சாதனத்தை நிறைவேற்றுகின்றோம். கடைசி இராவுணவில் இயேசு, 'இது எனது உடல் இது எனது இரத்தம்' என்று கூறியபோது அது உண்மையாகவே அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலாகவும் இரத்தமாகவும் மாறியது. இந்நிகழ்வானது இன்றும் 2000 ஆண்டுகள் கடந்தும் ஒவ்வொரு திருப்பலியிலும் நினைவு கூரப்படுகின்றது. இன்றும் நினைவு கூரப்படும்போது அது உண்மையான அப்பமாக, இரத்தமாக மாறுகின்றது. எனவேதான் நாம் திருப்பலியை நற்கருணைக் கொண்டாட்டம் என்கின்றோம்.

இறையியல் பராம்பரியத்தின்படி கிறிஸ்துவின் உடல் எனும்போது அது மூன்று விதங்களிலே பொருள்கொள்கின்றது.

i. வரலாற்றில் இயேசுவின் உடல் (historical body); அதாவது மனிதனாகப், பிறந்து, பாடுபட்டு, மரித்து, உயிர்த்த இயேசுவின் உடல்

ii. இயேசுவின் மறை உடல்; அதாவது நற்கருணையில் அவரது உடல் (Mystical body)

iii. அவரது உடலாகிய திருச்சபை (His ecclesial body)

மேலே குறிப்பிட்டது போல இயேசுவின் உடல் எனும் போது மூன்று அர்த்தங்கள் பெற்றாலும் அல்லது மூன்று நிலைகளை ஏற்றாலும் இம்மூன்றுமே ஒருமித்து கொண்டாடப்படுவது திருப்பலியில்தான்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் குறிப்பிடுவது போல 'வாழ்க்கையின் ஊற்றும், உறைவிடமும், உச்சமுமாக விளங்குவது நற்கருணையே'.

## 5.1. இது நமது பலி

கிறிஸ்து கல்வாரிப்பலியை தனது நன்றிப்பலியாக இறைதந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். இக்கல்வாரிப்பலியின் பலாபலன்களை நமதாக்கிக் கொள்ள நாமும் பலிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இதையேதான் இயேசு, "இதை என் நினைவாகச்செய்யுங்கள்" என்று எம்மிடம் ஒப்படைத்தார். ஏனெனில் இது எமது பலி.

## 5.2. கிறிஸ்தவ வாழ்வின் மையம்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினையின் படி நற்கருணையானது கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றாகவும் மையமாகவும் விளங்குகின்றது. நல்ல கிறிஸ்தவ வாழ்வு வாழ இதிலிருந்தே அருள் கிடைக்கின்றது. மேலும் அனைத்து அருட்சாதனங்களின் மையமாகவும் நற்கருணை விழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.3. நற்கருணையின் அடையாளங்கள்

| | |
|---|---|
| பீடம் | – பலியிடும் இடத்தின் அடையாளம் |
| அப்பம் | – கிறிஸ்துவின் உடல் |
| இரசம் | – கிறிஸ்துவின் இரத்தம் |
| காணிக்கை | – தற்கையளிப்பின் அடையாளம் |
| நற்கருணை மன்றாட்டு | –இறைபுகழ்ச்சி நன்றியின் அடையாளம் |
| அப்பம் பிடுதல் | – பகிர்வு |
| சமாதானம் கூறுதல் | – ஒப்புரவின் அடையாளம் |

## நிறைவாக

புகுமுக அருட்சாதனம் பற்றிய சரியான, தெளிவான அறிவானது திருச்சபை பற்றிய எமது எண்ணங்களையும், திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை ஆகிய அருட்சாதனங்களின் எண்ணக்கருவையும் மாற்றிய மைக்கிறது. திருச்சபை சட்டதிட்டங்களாலும் சடங்கு சம்பிரதாயங்களாலும் பிணைக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்ல; மாறாக, இது அன்பின் நிறுவனம்; மனிதர்களை பாசப்பிணைப்பில் ஒன்றுசேர்க்கின்ற அன்பின் நிறுவனம்.

இந்த அன்பின் நிறுவனமானது தனக்கென சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கொண்டு விளங்குகின்றது. இவ்வன்பின் நிறுவனத்தின் அங்கத்துவத்தைப் பெற நாம் புகுநிலை அருட்சாதனங்களின் ஊடகவே நுழைய வேண்டும். இந் நிறுவனத்திலே நாம் நுழைகின்ற போது வெறுமனே அங்கத்தவர்களாக மட்டுமன்றி, அவ்வன்பின் நிறுவனத்தின் தலைவரான இயேசுக்கிறிஸ்துவோடு சகோதரர்கள் என்னும் உறவை ஏற்படுத்துகின்றோம்.

## உசாத்துணை நூல்கள்


1. ஆரோக்கியராஜ் ஸ்., *திருவழிபாடு ஓர் அறிமுகம்,* TNBCLC, திண்டிவனம், 2008
2. PAUL PUTHANANGADY, *Baptism & Confirmation:* TPI, Bangalare, 2006
3. CHAUVET L.M., *The Sacraments,* Claretian Publications, Bangalare, 2002
4. KAVANAGH A., *The Rite of Christian Initiation,* USA, 1964





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருட்சாதன வாழ்வும் இன்றைய சவால்களும்

அருட்தந்தை ச.விமலசேகரன்
பங்குத்தந்தை
வலைப்பாடு

## முன்னுரை

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வு அடிப்படையிலேயே ஒரு திருவருட் சாதன வாழ்வாகும். பிறப்புத் தொடங்கி இறப்பு (மறு உலக வாழ்வுக்கான பிறப்பு) வரைக்கும் கிறிஸ்துவின் அருளை மனிதன் ஆழமாக அனுபவித்து, அந்த அருளினால் சிறந்த அருள் வாழ்க்கையை வாழத்தக்க முறையில் திருவருட்சாதனங்கள் வழங்கப்படுகின்றன. திருவருட்சாதனங்கள் ஒரு மனிதனுடைய வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் கிறிஸ்துவின் பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றன.

உலகமயமாக்கலும், அசூர விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியும், மனிதனுடைய சாதாரண வாழ்க்கை முறையில் பற்பல எதிர்மறையான மாற்றங்களை உண்டு பண்ணியுள்ளன. உதாரணமாக, உடனடிப் பொருட்கள், இணையத்தள கொள்வனவு, விற்பனை, இப்படியாக மனிதன் அவசர உலகில் அவசரமாகப், பயணித்துக்கொண்டிருக்கிறான். இதற்கு திருவருட் சாதன வாழ்வும் விதிவிலக்கல்ல. ஆண்டவருக்காக, அவருடைய அருளைப் பெறுவதற்காக, திருவருட்சாதனத்தில் பெறுகின்ற கிறிஸ்துவின் அருளோடு ஒத்துழைத்து வாழ்வதற்கு மனிதன் காத்திருக்கத் தயங்குகின்றான். ஆபிரகாம், செக்கரியா குழந்தைப் பேற்றுக்காக பல ஆண்டுகள் காத்திருந்தார்கள் (தொ.நூ. 17: 1-15, லூக். 1:18). சிமியோன், அன்னா போன்ற இவர்கள் மெசியாவுக்காக பொறுமையாகக் காத்திருந் தார்கள் (லூக். 2:22-38). முப்பத்தெட்டு ஆண்டுகளாக உடல் நலமற்றவர் காத்திருந்தார் (யோவா. 5:2-9). இவர்கள் அனைவரும் இறையருளைப் பெறுவதற்காகக் காத்திருந்தார்கள்.

திருவருட்சாதன வாழ்வில் இன்று பெரும் சவாலாக அமைவது பொறுமையோடு இறைவனுக்காகக் காத்திருக்காமையே ஆகும். பேதுரு கூறுவார், "அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித் திரிகிறது" (1பேதுரு 5:8). குறிப்பாக, அலகை விசுவாசிகளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருட்சாதன வாழ்வை சீரழிக்கவென்றே அலைந்து திரிகின்றான். அலகையோடும் தீமையோடும் போராடுவதற்காகவே கிறிஸ்து திருவருட்சாதனங்கள் மூலமாக எமக்கு அருளை வழங்குகின்றார்.

திருவருட்சானங்களை மூன்று நிலைகளாகப் பிரித்து, அந்த நிலைகளில் நாம் தற்காலத்தில் எதிர்கொள்ளுகின்ற சாவால்களைப் பற்றிப் பார்ப்போம்.

## 1. கிறிஸ்தவ புதுமுக திருவருட்சாதனங்கள்: திருமுழுக்கு, நற்கருணை, உறுதிபூசுதல்

## திருமுழுக்கு

ஒரு கிறிஸ்தவனுக்கு பிறந்த நாளைவிட திருமுழுக்குப் பெற்ற நாள் மிகவும் முக்கிமான நாள் ஆகும். ஏனென்றால் திருமுழுக்கின் மூலம் பிறப்புநிலைப் பாவமும், செயல்வழிப்பாவங்களும், அவற்றுக்கான அனைத்துத் தண்டனைகளும் நீக்கப்படுகின்றன. திருமுழுக்குப் பெறுவோர் மூவொரு கடவுளின் வாழ்வில் பங்கெடுக்கின்றனர்: இவர்கள் இவ்வருட் சாதனத்தின் மூலம் பெறும், புனிதப்படுத்தும் அருள், மற்றும் ஏற்புடைய வராக்கும் அருள் வழியாக கிறிஸ்துவோடும், திருச்சபையோடும் ஒன்றிணை கிறார்கள். இது இவர்களுக்கு கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்களிக்கிறது. திருமுழுக்குப் பெறுபவர் எப்போதும் கிறிஸ்துவுக்கு உரியவர். அவர்மீது கிறிஸ்துவின் அழியா முத்திரை பொறிக்கப்படுகிறது.

எனவே திருமுழுக்கின் மூலமாக நாம் கிறிஸ்துவில் முழுமையான விசுவாசம் கொண்டு, அனைவருடனும் இணைந்து பரிசுத்த வாழ்க்கை வாழ அழைக்கப்படுகின்றோம். திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட நாம் ஒவ்வொருவரும் சகோதர சகோதரிகள். கிறிஸ்துவே எமது வாழ்வின் மையம். கிறிஸ்து யாரையும் ஒதுக்கிவைக்கவில்லை; எல்லோரையும் தேடிச்சென்றார், அரவணைத்தார்.

இன்று எமது பங்குகளில், ஆலயங்களில் மக்களை ஒதுக்கி வைக்கின்றோம். அனைவருடனும் நட்புடன் பழக, உறவை வளர்க்க முன் வருவதில்லை. இப்படி செயல்படுவதனால் நாம் திருமுழுக்கின் மூலமாகப் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் அருளை புறந்தள்ளிவிட்டு, அலகைக்கு உட்பட்ட வாழ்க்கை நடத்துகின்றோம். இத்தகைய செயற்பாடுகள் பெரும் சவாலாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்கருணை

இறைமகன் கிறிஸ்துவின் உயிருள்ள பிரசன்னம் திவ்விய நற்கருணை. ஏனைய திருவருட்சாதனங்களைவிட நற்கருணைக்கு இருக்கும் முக்கியத்துவம் என்னவென்றால் ஏனைய திருவருட்சாதனங்கள் கிறிஸ்து வின் அருளைக் கொண்டிருக்கின்றன. ஆனால், நற்கருணையில் கிறிஸ்துவே பிரசன்னமாக இருக்கின்றார். நற்கருணையே கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் மையமுமாகும். ஒரே அப்பத்தை உண்டு, ஒரே கிண்ணத்தில் பருகுகின்ற கிறிஸ்தவ விசுவாசிகள் பல கூறுகளாகப் பிரிந்து வாழ்கின்றமை மிகப் பெரிய சவாலாக உள்ளதுடன், திருப்பலிக் கொண்டாட்டங்கள் வாடிக்கை யான செயற்பாடாக மாறிவிட்டன. திருப்பலி ஓர் உன்னத கொண்டாட்டமாக இருப்பதனால் அந்தளவிற்கு உயிர் ஊட்டமிக்கதாக அமையவேண்டும்.

இன்று புனிதர்களின் திருவிழாக்களின் போது, கிறிஸ்துவைவிட புனிதர்களை முதன்மைப்படுத்துவதும், திருப்பலியைவிட புனிதர்களின் ஆசீர்வாதம், தேர்ப்பவனிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் பல இடங்களில் காணக்கூடியதாக உள்ளன. வல்லமைமிக்க செயல்களுக்கு காரணமானவர் கிறிஸ்து அந்தக் கிறிஸ்துவை பல வேளைகளில் மறந்து விடக்கூடிய நிலைகளும் உள்ளன.

பல வேளைகளில் நற்கருணையை ஏனைய உணவைப்போல பார்க்கின்ற சந்தர்ப்பங்கள் நிலவுகின்றன. தகுதியற்ற முறையில் அல்லது தகுந்த ஆயத்தமில்லாமல் நற்கருணை பெறுகின்றமையும் பொதுவாகக் காணப்படுகின்றன. தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதத்தில், ஒருவர் எவ்வாறான மனநிலையுடன் நற்கருணைப் பந்தியில் பங்குபெற வேண்டும் என்பதை அழகாகக் கூறியுள்ளார் (1கொரி. 11:23-33). பொது நிலையினர், திருநிலையினர் ஆகிய இருதரப்பினரும் தூய பவுலின் வார்த்தை களுக்கு செயல்வடிவம் கொடுக்காமைகூட மிகப் பெரிய சவாலாக உள்ளது.

## உறுதிபூசுதல்

இத்திருவருட்சாதனத்தின் மூலமாக பல நன்மைகள் பெற்று வாழ்வில் உறுதிபெறுகின்றோம். இது தூய ஆவியானவரின் கொடைகள், கனிகளைப் பெற்று கிறிஸ்தவ நம்பிக்கைக்குச் சாட்சி பகரச் சிறப்பு ஆற்றல் அளிக்கிறது. தூய பவுல் சொல்லுவார், தூய ஆவியினால் இயக்கப்படுகின்றவர்களே கிறிஸ்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அனேக சந்தர்ப்பங்களில் பரமதிருத்துவத்தின் ஒருவரான தூய ஆவியானவர் மறக்கப்பட்டவராக இருப்பதை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. வாழ்வாலும் வார்த்தையாலும் இறைமகன் கிறிஸ்துவிற்கு சாட்சியம்பகர இவ்வருட்சாதனம் வழியாக அழைப்புப்பெற்றவர்கள் சாட்சிய வாழ்க்கை வாழாமல் உலகப் போக்கில் வாழுகின்றார்கள். எதிர் நீச்சல்போடத் தயங்குகின்றார்கள். ஆதித் திருச்சபையில் தூய ஆவியின் வருகையோடு அவர்கள் புத்துணர்ச்சியும் புதுத்தென்பும் பெற்று வீரத்தோடும் துணிவோடும், 'இயேசுவே ஆண்டவர்', என்று சாட்சியம் பகர்ந்தார்கள் (தி.ப. 2:36). திருத்தூதர்கள் பணிகள் நூல் முழுவதிலும் சீடர்களுடைய சாட்சிய வாழ்வை நாம் பார்க்கக்கூடியதாகவுள்ளது. இன்று இத்தகைய சாட்சிய வாழ்க்கை வாழத் தயங்குவதோடு, பரிசுத்த ஆவியானவரின் செயற்பாடுகளுக்குத் தடையாகவும் பலருடைய வாழ்வுள்ளது.

குறிப்பாக, உறுதிபூசுதல் பெற்ற இளையவர்கள் திருவருட்சாதன வாழ்வில் ஈடுபாடு இல்லாமல் இருப்பதோடு, திருச்சபையையும் விட்டு விலகி வருகின்றார்கள். இத்தகைய விடயங்கள் மிகப்பெரிய சவாலாகத் தான் இருக்கின்றன.

## 2. நலம் அளிக்கும் திருவருட்சாதனங்கள்:

ஒப்புரவு, நோயில்பூசுதல்

### ஒப்புரவு

இன்று உலகில் பாவம் பற்றிய உணர்வு மனிதர்களுக்கு இல்லாமல் போய் கொண்டிருப்பதை நாம் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இத்தகைய மனப்பான்மையை கிறிஸ்தவ விசுவாசிகளுடைய வாழ்விலும் காண்கிறோம். கிறிஸ்தவர்கள் பாவம் செய்வதில்லையா? என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. ஏன் என்றால் ஆலயங்களில் பாவசங்கீர்த்தன தொட்டியருகே அனேகர் செல்வதில்லை. பெரும்பாலும் வாலிபர்கள் இந்த அருட்சாதனத்தில் இருந்து விலகிச்செல்வதை அவதானிக்கலாம். திருநிலையினரும் இவ்விடயத்தில் அக்கறையுடன் செயற்படாத நிலைகளும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

ஒப்புரவு அருச்சாதனத்தை தகுதியுடன் பெறாமல், திவ்விய நற்கருணை உட்கொள்ளுகின்ற அனேகர் இருக்கத்தான் செய்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புரவு அருட்சாதனம் இருப்பதனால் நாம் பாவம் செய்துவிட்டு, அருட் சாதனத்தைப் பெற்றுக்கொண்டால் போதும் என்று பலர் சிந்தித்து செயற்படுவதும் ஒரு சாவாலான விடயமாகும். வேதாகமத்தில் கிறிஸ்துவை அணுகி வந்த அல்லது கிறிஸ்து சந்தித்த பாவிகள் தங்களுடைய பாவ வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்ததைப் பார்க்கக்கூடியதாகவுள்ளது; சக்கேயு (லூக். 19:1-10), விபசாரத்தில் பிடிபட்ட பெண் (யோவா. 8:1-11).

## நோயில் பூசுதல்

இன்று பலர் இத் திருவருட்சாதனம் மட்டில் ஒரு பிழையான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். எவ்வாறெனில், இவ்வருட்சாதனத்தைப் பெற்றவுடன் மரணம் நெருங்கிவிடும் என்ற பயம் நோயாளிக்கும் அவரைப் பராமரிக்கின்ற வருக்கும் உள்ளது. இத்தகைய மனப்பான்மையுடன் இறுதி நேரம்வரை காத்திருப்பதால் நோயாளி மனத்தளவில் ஆரோக்கியமான முறையில் ஒப்புரவு மற்றும் திவ்விய நற்கருணை அருட்சாதனங்களைப் பெறமுடியாத நிலை ஏற்படுகிறது.

இந்த திருவருட்சாதனம் நலம் அளிக்கும் அருமருந்து. விசுவாசி ஒருவர் நோயிலோ, முதுமையிலோ, மரண ஆபத்திலோ இருக்கும் நேரத்திலேயே இவ்வருட்சாதனம் வழங்கப்படவேண்டும். இது இறப்பின் வாயில் படியில் அமர்ந்திருப்பவருக்கு உரிய திருவருட்சாதனம் அன்று. இத்தகைய விளக்கங்களை விசுவாசிகள் கொண்டிருக்காமை ஒரு சவாலாக உள்ளது (யாக். 5:14-15).

## அன்புறவு, திருத்தூதுப் பணியின் திருவருட்சாதனங்கள்: குருத்துவம், திருமணம்

## குருத்துவம்

"நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" (யோவா. 13:15). கிறிஸ்துவின் இந்த வார்த்தைகள் குருத்துவத்தில் வாழப்பட வேண்டும். ஒரு குரு மறுகிறிஸ்து. மக்கள் (விசுவாசிகள்) குருவில் கிறிஸ்துவைக் காணவேண்டும். திருவருட் சாதனங்களை வழங்கும் வேளைகளில் குரு மறு கிறிஸ்துவாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றார்.. வளர்ந்துவரும் சமுதாயத்தில் குருத்துவ வாழ்வு ஒரு சவாலாகக் காணப்படுகிறது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியும், குருத்து வத்தைப் பற்றிய மாறுபாடான கருத்துக்களும் குருத்துவ வாழ்வை விரும்பாத ஒரு நிலைக்குக்கொண்டு செல்வதைக் காண்கிறோம். இன்றைய இளம் சமுதாயம் குருத்துவத்தை, 'இப்படியும் ஒரு வாழ்வா?' என்ற கண்ணோட்டத்துடன் பார்ப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்ட இக் குருத்துவ அருட்சாதனம் மகத்துவம் மிக்கது, மேன்மையானது, மக்களை இறைவன்பால் நடத்திச் செல்லும் சக்தி வாய்ந்தது. குருத்துவத்தின் இத்தகைய உன்னத நிலையை விசுவாசிகள் உணராமல் இருப்பது அல்லது அந்நிலையில் இருப்பவர்கள் கூட விளங்கிகொள்ளாமல் இருப்பது பெரும் சவாலாக உள்ளது.

## திருமணம்

"இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக." படைப்பின் தொடக்கத்திலேயே இறைவன் ஆணையும் அவனுக்குத் துணையாக பெண்ணையும் உருவாக்கியதை நாம் தொடக்க நூலில் வாசிக்கின்றோம்.

திருமணம் என்கிற இவ்வருட்சாதனம் இன்று ஒரு கேளிக் கூத்தாக மாறியிருப்பதைக் காண்கின்றோம். இன்று ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை மாறி, காலத்தின் கோலத்திற்கு அமைய, குடும்பங்கள் சின்னா பின்னம் அடைந்து, துன்பச் சூழலில் துவண்டு துயருற்று வருந்தித் தவிக்கின்றன. குடும்பங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழும் நிலையே சவாலாக அமைந்துள்ளது. குடிபோதைக்கு அடிமையாகிய குடும்பத் தலைவனின் வாழ்வு நல்லதோர் குடும்ப வாழ்வை அமைக்க முடியாத சவாலாக உள்ளது. பொருளாதார கஷ்ரம் என்று இன்று வெளிநாட்டு மோகம் வேகமாகப் பரவிவருவதனால் தந்தை வேறு தாய் வேறு பிள்ளைகள் வேறு என்ற நிலை மேலோங்கி, குடும்பங்களைச் சிதறடிக்கும் நிலையை உருவாக்கி வருகின்றது. குடும்பங்கள் இணைந்தது தான் குட்டித் திருச்சபை. ஆனால் திருச்சபையின் படிப்பினைகளுக்கு அமைவாக திருவருட்சாதனங்களைப் பெற்று நல்ல கிறிஸ்வத குடும்பங்களாக வாழ்வது சவாலாக இருக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழும் குடும்பங்கள் இறை ஆசீர் பெற்று வாழும் குடும்பங்களாகத் பங்கேற்கும் குடும்பங்களாகத் திகழ்கின்றன.

## முடிவுரை

திருவருட்சாதன வாழ்வுதான் கிறிஸ்தவ வாழ்வாகும். எமது வாழ்வினில் இறைவன் திருவருட்சாதனங்கள் மூலமாக எங்களை சந்தித்துக்கொண்டிருக்கிறார். எதற்காகவென்றால் நாம் மீட்புப்பெறுவதற்காக. எனவே, ஒரு விசுவாசியினுடைய முழுமையான ஒத்துழைப்பில்தான் இறைவனுடைய மீட்புச்செயல் சாத்தியமாகும். இதைத்தான் இயேசு இவ்வாறு சொல்வார், "இதோ இங்கே! அல்லது அதோ, அங்கே! எனச் சொல்லமுடியாது. ஏனெனில், இறையாட்சி உங்கள் நடுவேயே செயல் படுகிறது." திருவருட்சாதன வாழ்வினில் வருகின்ற சவால்களை இறையருளைக் கொண்டு நாம்தான் எதிர்கொண்டு இறை இயேசுவின் சாட்சிகளாக வாழவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய எமது குடும்ப, சமூக வாழ்வில் ஒப்புரவின் அவசியம்

இ. மரியதாஸ் ஜெயசீலன்
நிரந்தர மறை ஆசிரியர்,
யாழ் மறைமாவட்டம்

## முன்னுரை

அருட்சாதன வரிசையில் புகுமுக அருட்சாதனங்களுக்கு அடுத்ததாக ஒப்புரவு அருட்சாதனம் தரப்பட்டுள்ளது. இயேசு ஆண்டவர் தமது பாடுகள், மரணம், உயிர்ப்பினால் இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே முறிந்த உறவை ஒப்புரவாக்கினார். "கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக நம்மைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். ஒப்புரவாக்கும் திருப்பணியையும் நமக்குத் தந்துள்ளார்" (2 கொரி. 5:18) என்று புனித பவுல் கூறியுள்ளார். மனிதன் பலவீனன்; எனவே இறை மக்களும் தொடக்கத்தில் கொண்டிருந்த அன்பு நிலையிலிருந்து தவறி பாவத்தில் விழுந்ததால் இறைவனோடு இருந்த அன்புறவை முறித்து விடுகின்றான். எனவே தான் திருமுழுக்கின் பின் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு அருள்வதற்காக ஆண்டவர் இயேசு தனி ஓர் அருட்சாதனத்தை ஏற்படுத்தினார்

இறைமக்கள் இடைவிடாது மனந்திரும்பித் தங்களைப் புதுபித்துக் கொள்ள வேண்டும் எனத் திருச்சபை அக்கறையுடன் இறைமக்களை அழைத்துக்கொண்டிருக்கின்றது. திருமுழுக்கின் பின் பாவத்தில் விழுந்தால் அவர்கள் இறைவனுக்கும், அயலாருக்கும் எதிராகப் புரிந்த பாவங்களை ஏற்றுக்கொண்டு உளமார வருந்தி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற வேண்டுமென திருச்சபை அழைப்பு விடுக்கின்றது. எனவே, ஒப்புரவு அருட்சாதனத்தால் பாவம் மன்னிக்கப்படுவதோடு, பாவி இறைவனைச் சந்தித்து அவரோடும் திருச்சபையில் தன் சகோதரரோடும் ஒப்புரவாகின்றான். பாவத்தால் முறிந்த உறவு மீண்டும் உருவாகிறது.

## திருநூலில் ஒப்புரவு

### பழைய ஏற்பாட்டில் ஒப்புரவு

எம்முடைய சாதாரண மனித வாழ்விலே பிணக்குகள் ஏற்படுவதும், பின் ஒப்புரவு ஏற்படுவதும் இயல்பு. திருவிவிலியத்திலும் கூட இறைமனித உறவில் இதையே நாம் காண்கின்றோம். முதல் மனிதன் ஆதாமிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஆரம்பிப்பதைக் காண்கின்றோம். முறிந்த உறவைச் சரிசெய்ய இறைவனே முன்வருகின்றார். தம் ஒரே மகன் வழியாக உறவைச் சீர்செய்ய திருவுளம் கொள்கின்றார். இவ்வாறு பிணக்கு - ஒப்புரவு என்ற பாணியில் தொடங்கும் விவிலியம் இறுதிவரை அதே பாணியிலேயே செல்கின்றது. கடவுளாலே தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் கடவுளின் பிள்ளைக ளாக இருப்பதையும் பின் அவரை விட்டு, விலகுவதையும் அதன்பின் ஒப்பரவின் மூலம் மீண்டும் கடவுளோடு ஐக்கியமாவதையும் நாம் விவிலியத்தில் பார்க்கின்றோம்.

ஒப்புரவு என்ற சொல் பழைய ஏற்பாட்டிலே பயன்படுத்தப்படவில்லை. அதன் ஒத்தகருத்துடைய சொற்களையே பயன்படுத்தி வந்தனர். பழைய ஏற்பாட்டு நூல்களிலே பாவமன்னிப்புப் பழக்கமும் சடங்கு முறைகளும் மிகத்தெளிவாக இருப்பதைக் காணலாம். பாவமன்னிப்புக்கான பலி பற்றியும், பாவப் பரிகார நாள் பற்றியும் குறிப்புக்கள் உள்ளன. "பாவம் செய்தவன் ஒருவன் அவன் செய்தது பாவம் எனத் தெரியவரும் போது ஆட்டுக்கிடாய் ஒன்றை வாங்கி அதன் தலைமேல் கையை வைத்து, எரிபலிப்பொருள் வெட்டப்படும் இடத்தில், ஆண்டவருக்கு முன் அந்தக் கிடாயைப் பலியாக ஒப்புக் கொடுப்பான்." "இது பாவம் போக்கும் பலி" (லேவி. 4:24).

தொடக்க காலத்தில் கோவிலும், அதன் புனித இடமும் ஓர் எருது, ஓர் ஆடு, ஆகியவற்றின் இரத்தத்தால் புனிதப்படுத்தப்பட்டன. மக்கள் ஒரு வெள்ளாட்டின் தலைமீது தமது பாவங்களை அறிக்கையிட்டு வனாந்தரத்துக்குள் விரட்டி விடுவர். குரு தமக்காகவும் மக்களுக்காகவும் பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுப்பார்.

இப்பாவம் போக்கும் பலிகளைச் செய்யும் போது சில சட்டங்களைக் கடைப்பிடித்தனர். அதாவது ஆழ்ந்த வருத்தம் கொள்ளுதல் (யோவே. 1:8), ஆடைகளைக் கிழித்துக் கொண்டு சாம்பலைத் தலையில் தூவிக் கொள்வது (யோபு 42:6), கோணி ஆடை உடுத்தி மனித கௌரவத்தைத் துறத்தல் (யோனா3:6), நோன்பிருத்தல் (யோவே. 1:14), தலை குனிந் திருத்தல், மார்பில் அறைந்து கொள்ளுதல் (எரே. 31:19) என்பனவாகும்.

ஆண்டவருடைய உறவிலிருந்து பிரிந்துபோன இஸ்ரயேலரோடு தானாகவே முன்வந்து தன்னோடு ஒப்புரவாகக் கேட்கிற கடவுளின் வார்த்தை களை இறைவாக்கினர் எசாயா அழகாகக காட்டுகின்றார் (எசா. 54:7-8).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை மகன் இருவரிடையே நிகழும் உறவின் முறிவின் பின், தன் அப்பாவிடம் ஒப்புரவாக வரும் மகனின் குரலை இறைவாக்கினர் எரேமியா "பணியாத இளம் காளையை அடித்துத் திருத்துவது போல் என்னைத் தண்டித்துத் திருத்தினீர்; என்னைத் திரும்ப அழைத்துச் செல்லும் நானும் திரும்பி வருவேன், ஏனெனில் என் கடவுளாகிய ஆண்டவர் நீரே" (எரே. 31:18) எனப் பதிவுசெய்வார். ஒப்புரவாக ஓடிவரும் தன் அன்பு மகனின் குரல் கேட்டுப் பதறிப்போகிறார் கடவுள். "எப்ராயிம் என் அருமை மகனல்லவா? உனக்கு எதிராக நான் அடிக்கடி பேசிய போதிலும் உன்னை நான் இன்னும் நினைவில் கொண்டிருக்கிறேன். உனக்காக என் இதயம் ஏங்கித் தவிக்கின்றது. திண்ணமாய் நான் உனக்கு இரக்கம் காட்டுவேன்" (எரே. 31:20). கடவுளின் இதயத்திலிருந்து ஒப்புரவிற்கான ஏக்கம் வழிந்தோடிக் கொண்டிருப்பதை இறைவாக்கினர் எரேமியா அழகாகக் காட்டுகின்றார்.

இப்படியாக ஆரம்ப காலத்திலே ஒப்புரவின் மூலம் கடவுளின் பிள்ளைக்குரிய அந்த இழந்த நிலையை மீண்டும் பெற்றுக்கொண்டனர்.

## புதிய ஏற்பாடு காட்டும் ஒப்புரவு

புதிய ஏற்பாட்டில் "ஒப்புரவு" தனி மெருகு பெறுகிறது. ஏனெனில் எசாயா கூறிய (எசா. 43:4-6) ஒப்புரவு அளிக்கும் மருத்துவராக இயேசு திகழ்கிறார். அவரிலே 'பிளவு' அழிக்கப்பட்டு ஒப்புரவுப்பாலம் கட்டப் படுகிறது. "ஏனெனில் கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசுக்கிறிஸ்து எனும் மனிதர்" (1திமொ. 2:5).

திருமுழுக்கு யோவான், "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டியாம் இவரே உலகத்தின் பாவத்தைப் போக்குகிறவர்" (யோவா. 1:29) என்று சுட்டிக்காட்டுவதன் ஊடாக, இயேசு மனிதரை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பதற்கு இறைவனால் அனுப்பப்பட்டார் என்பதை உறுதி செய்கின்றார். "நாம் கடவுளுக்குப் பகைவர்களாயிருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரையே கொடுத்ததால் நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்" (உரோ. 5:10). கிறிஸ்து இயேசு வழியாக நாம் ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம். எனப் புனித பவுல் கூறுகிறார். எனவே, ஒப்புரவு அருட்சாதனம் மூலமாக நாம் கடவுளோடு ஒப்புரவாகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2கொரி. 5:20). நாம் பிற மனிதருடன் ஒப்புரவாகின்றோம் (கலா. 5: 13-15), மனிதன் தன்னோடு ஒப்புரவாகின்றான் (1திமொ. 1: 15-16). மேலும், படைப்போடும் ஒப்புரவாகின்றோம்.

திருமுழுக்கு யோவான் தன்னுடைய செயல்களிலும், போதனைகளிலும் மனமாற்றத்திற்கு அழைப்புவிடுத்துக் கொள்வதைக் காண்கின்றோம். இதன் வெளிப்பாடே அவர் யோர்தான் ஆற்றில் திருமுழுக்குக் கொடுக்கிறார். இதையே இயேசுவும் பெறுகிறார். இயேசு ஏன் அதனைப் பெறுகிறார் என்றால், பாவிகளாகிய எம்மோடு தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளவே. எனவேதான் தம்முடைய பணியின் ஆரம்பத்திலேயே இயேசு ஒப்புரவு, மன்னிப்பு இவைகளை மையப்படுத்திப் பல உவமைகளையும், சம்பவங்களையும் தருகிறார். இயேசுவின் நற்செய்திப்பணியின் மையமாக ஒப்புரவு இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இயேசு கூறும் ஒப்பரவானது எமது சொந்த மனமாற்றம் மட்டுமல்ல; மாறாக அது பிறர் அன்பிலும் வெளிப்பட வேண்டும் என்பது இயேசுவின் படிப்பினையாகும். மனிதன் பிற மனிதனோடு ஒப்புரவாகும் போதுதான் அவன் இறைவனோடு ஒப்புரவாகின்றான். மன்னிக்க மறுத்த பணியாளன் உவமையில் (மத். 18:21-35) தம் சகோதர சகோதரிகளை மனமாற மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார் என இயேசு கூறுகிறார். எனவே, ஒப்புரவு என்பது அருட்சாதனம் பெறுவதோடு முடிவதல்ல; நாம் யார் யாருக்கு எதிராகக் குற்றம் செய்தோமோ அவர்களை மன்னித்து ஏற்று ஒப்புரவாகிட வேண்டும்.

## ஒப்புரவு அருட்சாதனம் இன்று

ஒப்புரவு அருட்சாதனத்தை பலர் பெறுவதில்லை. அதை அசட்டை செய்கின்றனர். ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறாமல் நற்கருணை விருந்தில் பங்கெடுக்கிறார்கள். அனேக இளைஞர் 'ஏன் நாம் குருவிடம் சென்று பாவங்களை அறிக்கையிடவேண்டும். அவரும் எம்மைப் போன்ற மனிதர் தானே' என்று விதண்டாவாதம் பேசுகின்றனர். வேறு சிலர் குருவிடம் ஏன் பாவ அறிக்கை செய்ய வேண்டும்; இறைவனிடம் நேரடியாக பாவமன்னிப்புப் பெறலாமே எனக் கூறுகின்றார்கள். வேறு சிலர் பாவ அறிக்கை செய்தால் மற்றவர்கள் என்னை பெரும் பாவியாக கருதுவார்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற தயக்கம் காட்டுகின்றார்கள். ஒப்புரவு அருட்சாதனம் பற்றிய அறிவு அற்ற நிலையே இதற்குக் காரணம்.

முதல் நன்மை பெறும் பிள்ளைகளுக்கு செபங்களை பாடமாக்கச் செய்கின்றோம்; நற்கருணை பற்றி கற்பிக்கின்றோம். முதல் நன்மை பெறும் பிள்ளைகளை அச்சடங்கைச் சரியாகச் செய்வதற்கு பல தடைவைகள் பயிற்சி கொடுக்கிறோம். ஆனால், ஒப்புரவு அருட்சாதனம் பற்றி ஆழமாகக் கற்பிப்பதில்லை. இது பெரும் தவறாகும். எனவே, ஒப்புரவு அருட்சாதனம் பற்றிய அறிவை ஆழமாக இறை மக்களுக்குக் கற்பிக்க வேண்டும். ஒப்புரவு அருட்சாதனத்தின் பெருமை, சிறப்பு, அதனால் கிடைக்கும் அருள், அமைதி பற்றி சிறப்பாக விளக்கம் கொடுக்க வேண்டும்.

## குடும்ப, சமூக வாழ்வில் ஒப்புரவு

பாவிகளைத் தேடி வந்த கிறிஸ்து தனது பணியை திருச்சபையில் அருட்சாதனமுறையில் நிறைவேற்றி வருகிறார். எனவே, ஒப்புரவு அருட் சாதனச்சடங்கில் குருவின் பிரசன்னம் திருச்சபையின் பிரசன்னத்தைக் குறிக்கின்றது. திருச்சபையின் சமூக உறவை நிறைவேற்றுகிறது. ஒப்புரவு அருட்சாதனம் நிகழ்வதற்கு குரு மட்டும் போதாது; இறைதந்தையுடன் ஒப்புரவாக நம் சகோதர சகோதரிகளோடும் ஒப்புரவாக வேண்டும். "நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிப்பீடத்தில் செலுத்த வரும் பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிப்பீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டு போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்" (மத். 5: 23-24) அது மட்டுமன்று, "எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல் எங்கள் குற்றங்களையும் மன்னியும்" (மத். 6:12) என்று இயேசு செபிக்க கற்றுத் தந்தார். இன்று குடும்ப உறவுகள் பல வெவ்றே துருவங்களாகப் பிரிந்து வாழ்கின்றன. கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள் தமக்குள் உறவின்றி வாழும் நிலையிலிருந்து விடுபட்டு, ஒருவர் ஒருவரை மன்னித்து ஏற்று வாழும் போதுதான் ஒப்புரவு அருட்சாதனத்தின் மன்னிப்பு எமக்குக் கிடைக்கும். "தம் கண்முன்னேயுள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது" (1யோவா. 4:20).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையாக வாழும் நாம் தனித்துச் செய்யும் பாவமும் புண்ணியமும் எல்லோரையும் பாதிக்கிறது. ஏனெனில் நாம் கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்புக்கள். எம் பாவத்தினால் மறை உடலின் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் தடைச்சுவராக நின்ற நாம் மனம் வருந்தி பாவ அறிக்கை செய்வதன் மூலம் மன்னிப்பு பெறுவதோடு சமூகத்தோடு மறுபடியும் உறவுகொள்கிறோம்.

எனவேதான் ஒப்புரவு அருட்சாதனம் பெறும் நாம் உண்மையான மன்னிப்பைப் பெற்று அருள் வாழ்வில் நிலைக்க எம் உறவுகள், சகோதரர் சகோதரிகளோடு மன்னிப்புப் பெற்று ஒப்புரவாக வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பியோ

அருட்சகோதரன் சூ.எட்வின் நரேஷ்
2ம் வருட இறையியல்


புனித பியோ இத்தாலி நாட்டில் பியத்தெரஸ்சினா என்னும் சிற்றூரில் 1887, மே 25 அன்று கராசியோ போர்ஜியோன் மற்றும் மரிய ஜியுசப்பா தே துன்சியே என்போருக்கு நான்காவது மகனாக பிறந்தார். இவருக்கு பிரான்செஸ்கோ போர்ஜியானே என்று பெயரிட்டார்கள். இவர் சிறுவயதிலிருந்தே இறை பக்தியுடையவராக விளங்கினார். இவருக்கு 8 வயது இருக்கும்போது, தந்தையுடன் ஆலயத்திற்குச் சென்றிருந்தார். அப்பொழுது ஒரு பெண் தலைவிரி கோலத்துடன் ஆலயத்திற்குள் நின்றுகொண்டிருந்தாள். அவள் தனது குழந்தையை கையில் ஏந்தியிருந்தாள். அக்குழந்தை பிறவியிலேயே பெருந்தலையுடையதாகவும், சூம்பிய உடலமைப்பை உடையதாகவும் காணப்பட்டது. அவள் கண்ணீரோடு அக்குழந்தைக்காக வேண்டினாள். அவருடன் சேர்ந்து எம் புனிதரும் இறைவனிடம் உருக்கமாக வேண்டினார். ஆனால், அக்குழந்தை குணமடையாததைப் பார்த்த தாய், இக்குழந்தை எனக்கு வேண்டாம் எனக் கூறியபடி அக்குழந்தையைத் தூக்கி எறிந்தாள். உடனே அக் குழந்தைத் அழகிய குரலில் அம்மா என அழைத்தது. உடனே அக் குழந்தையை தூக்கிய போது அக் குழந்தை குணமடைந்து இருப்பதைக் கண்டு மனமகிழ்ச்சி அடைந்தாள். இவற்றை நேரில் கண்ட எம் புனிதர், தன்னை இறைவனுக்கு முழுமையாய் அர்ப்பணிக்க எண்ணினார். இதனால் தனது 16வது வயதில், 1903, ஜனவரி 06 அன்று மோர்கனேனே நகரில் இருந்த கப்புச்சின் சபையின் நவத் துறவியாக சேர்ந்தார். அதே ஆண்டு ஜனவரி 22ம் நாள் பிரான்சிஸ்கன் சபைத் துறவியாக உடை அணிந்து, தனது பெயரை பியோ என்று மாற்றிக் கொண்டார். இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்த மனிதன் இனி உலகைச் சார்ந்தவன் அல்ல என்பதற்கு அடையாளமாக தலையிலிருந்து சிறிதளவு முடியை வெட்டிக்கொண்டு தன்னை முழுமையாக இறைவன் பாதம் மலராக அர்ப்பணித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமான நோய்கள் இவரைத் துரத்தியமையால் குருத்துவப் படிப்பைத் தொடர முடியாமல் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் இறைவன் துணையால், படிப்பை முடிக்காவிட்டாலும் 1910ம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ம் நாள் பெணவேன்டோ தேவாலயத்தில் திருநிலைப் படுத்தப்பட்டார்.

நோய்கள் மட்டுமல்லாது பேயும் அவரை பலமுறை புரட்டி எடுத்தது. ஆன்மாவுக்கும் உடலுக்கும் நேர்ந்த சோதனையால் மீண்டும் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தம் தந்தையாருக்குச் சொந்தமான ஒரு நிலத்தில் குடிசை அமைத்து வாழ்ந்தார். அங்கு தான் முதன் முதலில் யேசுவின் 5 திருக்காயங்களைப் பெற்றுக்கொண்டார். ஆனால் அது வெளியில் வெளிப்படாது இருந்தது. அதாவது, 1911ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் நாள் அன்று, இறைமகன் இயேசு, தான் சிலுவையில் இரத்தம் சிந்தி வேதனைப்பட்டதை தந்தை பியோவுக்கு காட்டினார். அக்காட்சியைக் கண்ட புனிதர் கூறிய வார்த்தைகள்: "தந்தையே உம்மை நான் அன்பு செய்கின்றேன். இக்காட்சி என் இதயத்தை வேதனையாக்குகின்றது. நீங்கள் ஒரு பகலும் ஓர் இரவும் தான் பாடு பட்டதாக எண்ணுகிறார்கள். ஆனால், உமது பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. நீர் விரும்பினால் உம்மீது பாய்ந்த ஆணிகள் என் கரங்களையும் ஊடுருவட்டும்" என்று மன்றாடினார். அதன் பின் அவர் மரண வேதனைகளை அனுபவித்த போதும் அது யாருக்கும் தெரியாதிருந்தது.




1918ம் ஆண்டு ஆவணி 18ம் நாள் தந்தை பியோ மெழுவர்த்தி வெளிச்சத்தில் முழந்தாள் படியிட்டு செபிப்பதை ஓர் அருட்தந்தை கண்ணுற்றார். சில மணி நேரம் கழித்து அவ் வழி வந்தபோது அவர் மெழுகுவர்த்தி வெளிச்சத்தைக் காணாததால், உள்ளே சென்று பார்த்தபோது தந்தை பியோ இரத்த வெள்ளத்தில் மிதப்பதைப் பார்த்து, பயமுற்று அலறினார். உடனே அனைவரும் வர, தந்தை பியோவும் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்தார். அப்பொழுது அவரது கைகளிலும் கால்களிலும் விலாவிலும் இருந்து இரத்தம் வருவதைக் கண்ணுற்றனர். அவர் ஆண்டவரின் திருக்காயத்தை தனது 31வது வயதில் பெற்றிருந்தார். அன்றிலிருந்து அவரது காயங்களில் இருந்து ஒரு குவளை இரத்தம் ஒவ்வொரு நாளும் வந்துகொண்டிருந்தது. பல மருத்துவ பரிசோதனைக்கு எம் புனிதர் உட்படுத்தப்பட்ட போதும் அவரது காயங்களை யாராலும் குணப்படுத்த முடியவில்லை.

மக்கள் அலை கடலென அவரைக்காண வந்தனர். பலர் அவரிடம் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று மனமாற்றம் அடைந்தனர். அவரைப்பார்த்ததும் பேய்கள் ஓட்டம் எடுத்தன. வியாதிகள் குணமடைந்தன. இறைவனின் அருளால் இரு இடங்களில் தோன்றும் வரத்தை பெற்றிருந்தார். பல மொழிகளில் வரும் கடிதங்களை வாசிக்கவும், அவற்றின் அர்த்தம் விளங்கவும், அக் கடிதங்களுக்கு பதிலனுப்பவும் கூடிய அருளை அவர் பெற்றிருந்தார்.

உலக அமைதிக்காக தனிப்பட்ட முறையில் செபியுங்கள் என்று திருத்தந்தை 12ம் பத்திநாதர் அறிவித்த போது எம் புனிதர் 5 பேர் கொண்ட ஒரு செபக் குழுவை நிறுவினார். பிற்காலத்தில் 68,000 உறுப்பினர்கள் அக்குழுவில் இருந்தனர். புத்தகத்தில் நாம் இறைவனை, தேடுகின்றோம்; செபத்தில் அவரைக் கண்டுகொள்கின்றோம். செபமே இறைவனின் இதயத்தைத் திறக்கும் திறவுகோல் எனக் கூறியவர், ஒவ்வொருநாளும் பல மணி நேரம் செபத்தில் கழித்தார். 1968 புரட்டாதி 23ம் நாள் விண்ணுலகில் வாழ்வைத் தொடர அழைக்கப்பட்டார். 1999 மே 02 அன்று அருளாளராக திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் எம் புனிதரை உயர்த்தினார். பின் 2002 ஆடி 16ம் நாள் புனிதராக உயர்த்தப்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Synopsis

## Sacraments: A Theological Perspective

Every religion has its rituals. Sacraments are the fundamental ecclesial rituals. They are not mere signs but efficacious signs.

Jesus himself instituted all the sacraments, either by explicit command or by his work or teaching. Another name for sacrament is "mystery" (*mysterion*), which reminds us of the mystery of Christ's presence and action in each of these signs that he instituted. The mysteries of the Christian life are derived from the mysteries of the life of Christ. The word *sacramentum* was used to translate the Greek word *mysterion*. Mystery and sacrament are to be considered synonymous.

Sacraments are the visible signs of the invisible grace. If sacrament means the revelation of the Salvific will of God and its realization in an external visible form (which makes the gift concrete, a gift of salvation in a visible form), then Christ is the sacrament of God.

Just as Christ rendered present the Father who revealed himself to men and performed their salvation through him and in him, likewise, the Church makes present the Christ that, in the Church, and through the Church is a visible and historical reality containing an invisible reality, operating in it in a mysterious but efficacious way through the sacraments of the New Law.

**Fr.T. Selvaratnam**

## Biblical Background of the Sacraments

The Catholic Church has seven Sacraments such as Baptism, Penance, Eucharist, Confirmation, Holy Orders, Matrimony and the Anointing of the sick. These Sacraments have an external sign and an internal Grace. Each of these Sacraments has its origin in the Scripture or rather has a Biblical



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

background. Though the Sacraments we receive are found in the Biblical writings as it is today, they have their beginning stages in the Bible.

The Sacraments were prefigured by certain rites and events of the Old Testament. There are many references: e.g. the circumcision and the ritual of the washing prefigured avid the Baptism, accepting the faith in One God; and the expiation rites prefigured the Sacrament of Reconciliation, the Paschal lamb and the bread prefigured the Eucharist, the out pouring of the Holy Spirit prefigured Confirmation, the Consecration of Levites and priests prefigured Holy Orders, the creation story itself prefigured Matrimony, and the using of oil for healing prefigured the Anointing of the sick.

In the New Testament: the Baptism of Jesus Himself, Jesus, act of forgiving the sinners in different places, the Last Supper of Jesus, the Pentecost event, the institution of the priesthood at the last supper by Jesus Christ the High Priest, the teaching of Jesus about divorce and the parable of the good Samaritan and the praying over the sick and anointing them with oil in the name of the Lord in the Letter of James prefigured the seven Sacraments respectively. Hence, Jesus Christ Himself is the Author of all the Sacraments.

**Fr.M. Jegankamar Coonghe OMI**

## The sacraments of Christian Initiation

Christian initiation is an act by which one shares in the life of Jesus Christ. Jesus called it a new birth. The child that is physically born to a parent becomes related to the whole family. In the event of Christian initiation the person becomes related with Christ, and also becomes a member of the Church which is the Mystical Body of Christ. He enters into a relation with the community of the faithful and finally has a share in the divine life. The ultimate goal of Christian initiation is the sharing in the Trinitarian life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Christian initiation takes place through three sacraments: Baptism, Confirmation and Eucharist. In fact, in the early Church, the three sacraments were given together in one liturgical action and the whole celebration was called Christian initiation. Through Baptism the Christian acquires the organism of Christ, the new Adam. Through Confirmation, the Christian organism becomes operative by the power of the Holy Spirit. Through Eucharist, the Christian manifests the new life as a life of love and sharing. In the Apostolic Church, becoming a Christian did not merely mean a change of religion but entering into a new way of life lived under the impulse of the Holy Spirit.

**Bro. F.R. Nitharsan**

## Sacramental Life and the Present Day Challenges

Sacraments are the utmost forms of God, enriching the human race by his abundant graces. Jesus, as the supreme sacrament, conveyed the totality of his Father's Grace. The Church is also primarily a sacrament. God encounters man in and through the sacramental grace. By doing so, He initiates the salvific act of the human race. Therefore, the salvation of humanity is soleily the initiative of God, while the cooporation is unavoidable on the part of man. However, one cannot deny the fact that there are challenges and difficulties in the sacramental life. The Christian is strengthened by the grace of God to take up his cross and to follow Christ. Thus, one has to embrace happy and sad experiences of his\ her life in Christ in order to attain the fullness of grace , Christ.

**Fr.S. Vimalasegaran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Necessity of the Sacrament of Reconciliation in Today's Familial and Social life

The Sacrament of Reconciliation is a great gift of God to the Church and has a noblest character. It demonstrates the fragile nature of human beings while expounding the gratuitous gift of forgiveness from God. The biblical traditions contribute a lot to the unconditional love and mercy of God towards the sinners.

Today, there is a descent in the reception of this sacrament of reconciliation. People are complacent in their way of living. The Christian families are carried away by worldly distractions and the loss of the sense of the divine prevalence. Thus, there is an earnest need for the families to express their exemplary life style to the world. By forgiving and forgetting the offences of others, the members in the Christian families may manifest the abounding love and mercy of God.

**Mr.I.M. Jeyaseelan**

## St. Pio

He was born on 25th May 1887 to Grazio Forgione and Maria Giuseppa De Nunzio in Pietrelcino, Italy. His parents named him Francois. But he took the name of Pio at his investiture at the Capuchin Friary. He made his solemn profession on 27th January 1907. Even though he did not complete his priestly education, he was ordained priest on 10th August 1910. At the age of 31, he received the stigmata. He is a man of deep piety, prayer and prudence. The special charism he had for sacramental reconciliation, at which he spent long hours daily. He breathed his last on 23rd September 1968. He was canonized on 16th June 2002 by Pope John Paul II.

"The life of a Christian is nothing but a perpetual struggle against self: there is no flowering of the soul to the beauty of its perfection except at the price of pain" (St. Pio).

**Bro.S. Edwin Naresh**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 200/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 20
Euro 18

தனிப்பிரதி 80/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly
Annual Subscription : Local (Incl.postage) Rs. 200/=
Foreign (Incl.postage) U.S.$ 20
Euro 18
Single Copy Rs.80/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel : 021 222 2482, 021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org